பத்திராதிபர். எ. ஸ்ரீ. இராமாநுஜலு நாயுடு Regis. No. M. 493.

பிரஜாநுகூலன்



1932-ம் வருஷம்

V. 26 PRAJANUKOOLAN No. 1

விஷயங்கள்

வருஷ சந்தா ரூ ॥ 1-
வெளிநாடு 1-8-0
தனிச் சஞ்சிகை அணா 2.

பிரஜாநுகூலன் பிரஸ், ஸ்ரீரங்கவிலாசம் 611 மேலச்சித்திரை வீதி ஸ்ரீரங்கம்.

பிரஜாநுகூலனின் 26-ம் ஆண்டு.

இப்புது வருட முதல் நமது "பிரஜாநுகூல"னுக்கு 26-ம் ஆண்டு ஆரம்பமாகின்றது. அனுபவச் சுவையில் பழகிய மனம் "பிரஜாநுகூல"னையே நாடுகின்றது. பத்திரிகா தாமதம் கவனியாது, பூர்ணமான அன்பு கொண்டு என்றும் ஆதரிக்குமாறு பிரார்த்திக்கின்றோம்.

சென்ற 1931-ல் நமக்குப் பலவித கஷ்டங்கள்; சோதனை கவலைகள்; ஆதலின் சென்ற வருஷத்து 25-ம் வால்யத்தில் 7-ஸஞ்சிகைகளே இதுவரை வெளியாயின; பாக்கியுள்ள 5 ஸஞ்சிகைகளையும் பாக்கிப்படிமே பாக்கியவந்தர்கட்கு இப்புது ஆண்டில் சேர்த்துக் கொடுத்து விடுகிறோம்.

இங்கு ஒரு விஷயம்: சென்ற ஏழுவருஷங்களாகப் 'பிரஜாநுகூலனை' அச்சிட்டுத்தரும் ராஜு பிரஸ் சொந்தக்காரரான ஸ்ரீமான் ஜெ. ஆர். ரங்கராஜு காரு சட்ட மறுப்பு இயக்கத்தின் சார்பாக எந்த நிமிஷம் அபசாயமாக விருந்தினராவரோ தெரியவில்லை. அவர்களும் கைது செய்யப்பட்டு ராஜு பிரசும் கவர்ன்மெண்டாரால் கைப்பற்றப்பட்டால் மட்டுமே அடுத்த பிரஜாநுகூலன் தாமதித்து வெளிவரும். 'ராஜு' பிரஸ் கைப்பற்றப்படாவிட்டால் வழக்கம் போல் வெளிவரும்.

12-ஸஞ்சிகைகளும் சரிவரக் கிடைத்து, சந்தா முடிந்தவர்கள் புதுவருஷ சந்தாவை மணியார்டரில் உடனே தரவேண்டுகிறோம், நெடுங்காலமாய் ஆதரித்து வரும் குணசீலர்களும், ஞானபூஷணிகளும் இது கண்டதும் புது வருட சந்தாவை மணியார்டரில்தானே உபகரித்தருளுவது மிகுபுண்ணியமாகும். புது வருஷத்தில் பத்திரிகை வேண்டாதோர் தெரிவித்து விடுவது உத்தமம். அது வீண் வி. பி. செலவைக் குறைக்கும். மணியார்டர் அனுப்ப சௌகரியப்படாதவர்கட்கு வி. பி: அனுப்ப சித்தமாயிருக்கிறோம். ஸர்வலோக சரண்யராகிய ஜகதீசன் நம்மெல்லோரையும் இரக்ஷிப்பாராக.

எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு.
பத்திராதிபர்.

நன்கொடை:—நெமூத்துப்பட்டி ஸ்ரீமான் C,V. N. நாராயணன் செட்டியாரவர்கள் தமது பிதா அவர்களின் ஷஷ்டி யப்த பூர்த்தி வைபவத்தின் நன்கொடையாகப் "பிரஜாநுகூலனுக்கு" உபகரித்த ருபாய் ஒன்றையும் அன்புடன் பெறுகக் கொண்டோம். ஸ்ரீமான் செட்டியாரவர்கள் தமது பிதாவைப் போன்று பெரிய தாதா ஆகிப் பல்லாண்டு பல்லாண்டாக வாழ்க. பதியும் குமாரரும் இனிது வாழ்க.

பத்திராதிபர்.

இனிய நினைவுகள் நிறைந்தது

ஆனந்தபோதினி

மலம். 26. } திருச்சி. 1932. { இதழ். 1.

ஓர் பெண்ணின் குரோதம்.

(முன் தொடர்ச்சி.)

தான் திருடிய அந்த ரகசியக் காகிதங்களில் காணப்பட்ட விஷயங்களைமட்டும் அப்படியே வைத்து, அக்கடிதங்களில் காணப்பட்ட பிரபுக்களின் பெயர்களையும், அக்கடிதங்களை எழுதினோரது பெயர்களையும் நன்றாக அழித்துவிட்டு அவைகளைச் சேனாதிபதிக்கு அனுப்பி அத்துடன் ஒரு கடிதமும் எழுதிக்கொண்டனள், அதனில் தன்னைத் தனியாக வந்து குறித்த ஓரிடத்தில் பார்க்கும்படிக்கும், அப்படிப் பார்த்தால் தான் அடித்துள்ள பிரபுக்களின் பெயர்களைக் கூறுவதாகவும், அதற்காகத் தனக்கு 700-ரூபில்கள் (ரூபில் என்பது ரூபாய் 2-2-0க்குச் சரியானது) இனும் கொடுக்கவேண்டுமென்றும் எழுதியிருந்தனள். சேனாதிபதி அக்கடிதத்தை உண்மையென நம்பினனாயினும், தான் முன் ஜாக்கிரதையாயிருக்கக் கருதிக் கையில் துப்பாக்கியுடன் குறிப்பிட்ட இடஞ் சென்றனன்.

ஃ

அங்கே ஆண்வேடத்துடன் பெண் நின்றுகொண்டிருக்கின்றனள்; சமீபித்து நின்றதொரு பாழடைந்த வீட்டிற்குப் போய் வேறு சில காகிதங்களைக் கொடுப்பதாகச் சொல்லி மெதுவாய் சேனாதிபதியை யழைத்துப் பாழும் வீட்டிற்குள் தான முன்பாக வழிகாட்டிக் கொண்டும் பின்னே அவன் வரவுமாகச் செல்லுகையில், திடீரென்று அரை நொடியில் திரும்பிக் கதவை வெளியாகத் தாளிட்டுக் கொண்டனள். கூட்டிலடை

சிலருக்குக் குழந்தைகளை விட்டுப்போக மனம் வருவதில்லை; ஆனால், மனைவியின் கொடுமையோ தாளாது வேறு தேசம் ஓடிப் போகும்படி தூண்டுகிறது. இரண்டில் எதைச்செய்வது?

ப்பட்ட புலியைப்போல் சேனாதிபதி விழிக்கிறார்; உறுமுகிறார்; கைதியானார். இனி என் செய்வது? பெண்மணியானவள் உட்புறத்திருக்கும் சேனாதிபதி செவியுறும்படி தன்னைப் பற்றி யுரைத்துவிட்டுத் தற்கொலை புரிந்துகொண்டு பாழும் வீட்டுக்கு வெளிப்புறத்தில் மாண்டுபோனாள். பசியினால் வருந்தி சேனாதிபதியும் மாண்டுபோயினான். இரண்டு மூன்று வாரங்களுக்குப்பிறகு அப்பக்கத்திற் குடியானவர்கள் வந்ததும் இச்சவங்கள் தென்பட, உண்மை யின்னதென்பதை யறிந்துகொண்டார்கள்; ஆகவே, ஸ்திரீயின் குரோதம் பொல்லாதது.

ஃ

கட்டிக்கொண்ட மனைவியும், பெற்று வளர்த்த தாயும், உடன் பிறந்த சகோதரிகளும், தாய்மாமனின் மனைவியும், தந்தைக்கு மறுதாரமாய் வந்த சித்ராங்கியும், பிதாவினோடு பிறந்த ஸகோதரிகளும், நண்பனுக்கு வந்த மனைவியும், சிற்றப்பன் பெரியப்பன் பெண்டாட்டிகளும், தன்னைக் காதலில் ஏமாறவிட்ட கன்னிகையும் விரோதிகளாகிவிடும்போது, அவர்களை எதிர்த்துக்கொண்ட ஆடவர்களின் பாடு கனத்த திகைப்புக்கும் மீளாச் சஞ்சலத்திற்கும் ஏதுகரமாய்த் தப்புவதற்கில்லாதபடி யாகிவிடும். பட்டாருக்குத் தெரியும் அந்தப் பாடு!

கெடுதி செய்யத் துணிந்தவன் தனக்கு அழிவுகாலத்தை வெகு சமீபத்தில் வைத்துக்கொண்டிருக்கிறான்: கெட்டது எண்ணாதே. பிணியாளிகூடத் தன்னைப்பிணியாளி என்று கெடுதியாக எண்ணும் போதுதான் அதிகபலஹீனனாகிறான்.

மூன்றும் பாகம்

ஆசிரியரின் குறிப்புகள்.

கிளப்புச் சாப்பாடு:—உருளைக்கிழங்கு போன்ற விஜயதி கமான பதார்த்தங்களோடு போஜனமிட்டால், அந்த ருசியி ஞல் கால்படி அரிசி சாப்பிடப்பட்டவன் அரைப்படி அரிசி சாப்பிட்டு விடுவானென்று கிளப்புக்காரர்கள் பயப்படுகிறார் கள். அதனால் தான் இலையில் வைத்துப்போகக்கூடிய வித மாகச் சமையல் செய்வதாகவும், அப்போது அருவருப் போடு சிறிது சாதம்மட்டும் சாப்பிட்டுவிட்டுப் போவார்களெ ன்றும் கிளப்புகாரர் சொல்லுகிறார். எப்போதும் உப்பைக் குறைத்தேதான் போடுவது வழக்கமாம். சரியானபடி உப்பு போட்டு விட்டால் அந்த ருசியினால் இன்னும் கொஞ்சம் சாதம் விழுங்கினால் என்ன செய்கிறதென்று கிளப்புக்காரர் கவலைப்படுகிறார்.

ஒரு நாளைக்கு ஒன்பது அணு:—வெளியூரில் சாப்பாட் டுச் செலவு ஒரு தினத்துக்கு ஒன்பது அணு ஆகிறது- காலை யில் பலகாரம் 1அணு. மத்தியானம் சாப்பாடு ரூ 0-4-0. இரவு ரூ 0-4-0ஆக ஒன்பது அணு. கிளப்பில் உண்ணாமல் பாத்தி ரங்களை எடுத்துப்போய் ஒரு ஆள் சாப்பாடுதரும்படி கேட்டு வாங்கிக் கொண்டு வந்துவிட்டால் அது மத்தியானம் இரவு இரண்டு வேளைக்கும் போதுமானதாயிருக்கும். நான்கு அணு லாபமாகும். இது 1911-ம் வருஷ ஏழைக் கணக்கு.

ஊர் பேதம்:—சென்னப்பட்டனம் வேறு. சன்னப்பட் டணம் வேறு. இது மைசூருக்குக் கொஞ்சம் தூரத்திலிரு க்கிறது. தூத்துக்குடியில் புதுக்கோட்டை என்ற ஊர் உண்டு. புதுக்கோட்டை சமஸ்தானம் திருச்சியிலுள்ளது. இரண்டு புதுச்சேரி உண்டு. மதருஸ் வேறு. சதாருஸ் வேறு. இவ்வித மான இடங்களுக்கு ஜில்லா பெயரையும் குறிப்பிடுவதுடன் எழுத்துப் பிழையையும் கவனிப்பது முக்கியம்.

வீட்டுக்காரன் வீட்டிலிருக்கும்போது கண்டபடி செலவிடச் சொல்லும் பெண்கள் அவன் போன பின்பு வாழும் விதமோ வெகு சிக்கனம்.

ஒரு பணக்காரப் புருஷன் தேவை:—ஆங்கிலமாதர்களிற் சிலர் முகத்துக்கு அழகு உண்டாக்கிக்கொண்டு யாரேனும் ஒரு தனிகனை மயக்கி அவனை விவாகம் செய்துகொண்டுவிடப் பார்க்கிறார்கள். இந்த முயற்சி இங்கிலாந்தில் ஏழைவீட்டுப் பெண்களிடம் அதிகம். கலியாணம் ஆனபிறகு வதனம் எப்படிப் போனாலும் பாதகமில்லை. எதை அழகென்று புருஷர்கள் நினைக்கிறார்களோ அந்தப்படிச் செய்வது ஆங்கில மாதர்களின் வழக்கம்.

ஒத்தர் ஒத்தர்:—இது ஜட்கா வண்டிக்காரர்களுடைய பரிபாஷையாகும். ஒருவர் என்ற பதம் ஒருத்தர் என்றாகி ஒத்தர் என்று முடிந்திருக்கிறது. இப்படியே வைஷ்ணவப் பிராமணர்கள் நாலாயிரம் ஓதும்போது றகரத்தை னகரமாக்கி விடுகிறார்கள். கன்று என்பதைக் கன்னு என்று உச்சரிப்பார். அந்தப்பாடல்களைச் சொல்வதற்கென்றே ஒரு பிரத்தியேகமான ராகம் உண்டு. அதன் தொனி தூக்கத்தில் குறட்டை விடுகிற சப்தத்தை ஒத்திருக்கும்! இந்த ராகம் எந்த சங்கீத சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறதோ அறியோம்!

ஸ்ரீரங்கம் கோயில்:—ரங்கநாதருக்கு அர்ச்சனை செய்ய நான்கணா, தேங்காய் திருவலி செய்வதானால் ஒவ்வொரு தேங்காய்க்கும் காலணா, இதைத் தவிர வழியில் கண்டு நம்மை அழைத்துப் போகிற பிராமணரிடம் ஸ்வாமி தரிசனம் ஆனபிறகு தேங்காய் துளசி முதலியவற்றை நாம் பெற்றபிறகு கொடுத்துவிட வேண்டும். அதற்கு மேல் அதற்கு இதற்கு என்று கேட்பர். ஏமாந்தவர்களாயிருந்தால் கொடுப்பதும் உண்டு தான். உண்டியலில் காசு போடுகிறதற்குப் பதிலாக அந்தக் காசுக்கு நெய் வாங்கி உள் தீபத்தில் ஊற்றுவது உத்தமம். திருப்பதி உண்டியல் பணம் அர்பதனெட் கம்பேனியில் ஆற்றோடே போனது தெரியுமல்லவா?

வண்ணான்:—ஒவ்வொரு தடவையும் ஒரு துணியை யெடுத்துக்கொள்கிறான். கேட்டால் பிறகு வருமாம். பிறகு

நீண்ட ஆயுள் அநேக சந்தோஷமே. ஆனால், யௌவனத்தை இழந்து அவமானமாக வெகுகாலம் தவிப்பது சங்கடம் தான்.

என்பது எப்போதோ! இன்னும் சில நாளில் சலவை செய்து துணி உடுக்கும் ஆசையையே ஒழிக்கக் காலம் வந்து விடும்போல் காண்கிறது. ஊரார் துணிகளைக் கொண்டு கல்லை உடைக்கப் பார்க்கிறான். வண்ணானுக்கும் கல்லுக்கும் வெகு காலத்து விரோதம் போலும்! தம் இஷ்டம்போல் ஊரார் வேஷ்டிகளை யுடுக்கப் பாக்கியம்பெற்ற பிரபு வண்ணாசாமிதான்!

ஜாதி பேதம்:—இந்தியனை பறையனைத் தீண்டப்படாது. அந்நியர்களான ஜப்பானியர், சீனர் ஐரோப்பியர் இவர்களை மட்டும் தொட்டுக்கொள்ளலாம். நாவிதனை நெருங்கினாலும் தீட்டு. அவன் மேளம் வாசிக்க வரும்போதும், அவனிடம் வைத்தியம் செய்து கொள்ளும்போதும் தீட்டு கிடையாதாம்!

மலையாள நம்பூதிரிகள்:—மாப்பிள்ளையிடமிருந்து தாலியை வாங்கிக்கலியாணப் பெண்ணின் கழுத்தில் அந்தப் பெண்ணினுடைய தகப்பனே கட்டிவிடுவான். மாப்பிள்ளை கட்டுவதில்லை! இது வெகு விநோதம்! தகப்பனே முதல் கணவனாக்கும்!

கல்கத்தா பத்திரிகையில் ஒரு காயஸ்த பிராமணன் எழுதுகிறார்:—எனக்கு ஏழு பெண்களுண்டு. எங்கள் ஜாதியில் பெண்களுக்குப் பன்னிரண்டு வயதிற்குள் கல்யாணம் செய்து முடிக்கவேண்டும். இந்த பிராந்தியத்தில் குலீன பிராமணப் பிள்ளைகளைப் பார்த்தால் அவர்கள் தேறும் பரீட்சைகள் ஒவ்வொன்றுக்கும் 2000-ரூ வரதக்ஷிணை கொடுக்க வேண்டுமாம். அதைக் கொடுத்தாலொழிய அவர்கள் விவாகம் செய்கிறதில்லை. நான் பெரிய ஸம்ஸாரியானதால் எனக்கு ஆஸ்தி நாஸ்தி. எனக்கிருக்கும் ஏழு பெண்களையும் வரதக்ஷிணை கொடுத்து விவாகம் செய்துவைக்க எப்படியாகும்? என் பெரிய பெண்ணுக்குக் கல்யாணம் செய்யவேண்டி இரண்டு வருஷமாய்ப் பிரயாஸைப்பட்டேன். சொற்ப வரதக்ஷிணை கொடுத்தால் யாரும் அங்கீகரியார். இதனால் கல்யாணம் தடைப்ப

தெய்வத்தினிடம் நம்பிக்கையுள்ள பேர்வழிகள் எவரும் வெற்றி தங்களுடையதென எப்போதும் நம்பியிருக்கலாம்.

ட்டிருக்கிறது. இனி எப்படி நடக்குமோ நானறியேன்! முதல் பெண்ணுக்கே தாளம் போடும்போது மற்றப் பெண்களுக்கு என்ன செய்யப்போகிறேன்!

கோபம்:—அதிகமான கோபாவேசத்துடனிருக்கிற ஒரு பெண், அந்தக் கோப சமயத்தில் தன் குழந்தைக்குப் பால் கொடுத்துக் கொண்டிருந்தாளானால், அந்தப் பால் விஷமாக மாறிவிடும். கோபத்தின் கொடூரம் அத்தகையது. அந்தப் பாலையுண்ட குழந்தை உடனே நோயுற்றுத் துன்புற்றுப் பலவீனப்பட்டுப் போய்விடும். கோபமே அபரிமிதமாக ஒருவனைப் பிடித்துக்கொண்டாலும் அவனைக் கொன்றுவிடும். அல்லது பித்தனாகச் செய்துவிடும். மகாலோபியினுடையவும், கோபியினுடையவும், வேர்வையையும், எச்சிலையும் எடுத்துப் பரீட்சித்து, அவற்றில் விஷத்தன்மை இருக்கிறதென்று பண்டிதர் கூறுகின்றனர். ஆகையால் கோபத்தைவிட்டுச் சாந்தத்தையடையவேண்டும். சாந்தம் உயிரை வளர்க்கும்; உடலை வளர்க்கும். கோபம் உடலைக் கொல்லும், உடலுக்கு விஷத்தைக் கொடுக்கும். உயிரையே ஓட்டிவிடும்.

தற்கால விசேஷம்:—இந்தக் கலிகாலத்தில் நாகரீகம் அதிகரித்திருக்கிறது. வியாதியும் மதியீனமும் மலிந்து கிடக்கின்றன. அறியாமை தலைவிரித்தாடுகிறது. எவனைப் பார்த்தாலும் (ஆயிரம்பேரில் தொள்ளாயிரத்து ஐம்பது பேர்) பலவீனமா? எங்கு பார்த்தாலும் மூளை பலவீனம், நரம்பு பலவீனம், தேகபலவீனம், இதே கூப்பாடா? 12-வயதில் சிறு பிள்ளைகள் மூக்குக்கண்ணாடி போட்டு அழகு பார்க்கிறதா? அநந்தம் டாக்டர்களிருந்தும், வியாதிகள் ஒழிந்த பாட்டைக் காணோமே? எத்தனை யெத்தனை மருந்துகள் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுகின்றன!

மனோலக்ஷணம்:—மனசைப் போன்ற சிநேகனுமில்லை, மனசைப்போன்ற விரோதியுமில்லை, மனசை வழியனுக்கி அடக்கியாளும், ஒருவனுக்கு மனசைப்போன்ற சேவகன்

ஒருவரைப் பகைத்துக் கொள்ள நினைத்த நேரத்தில்தான் அவருடைய தயவு நமக்கு அதி அவசியமானதாகி விடுகிறது.

திரிலோகத்திலுமில்லை. மனசைத் தனக்கு எஜமானாக்கி, அதற்கு அடங்கிப் பணிசெய்யும் மூடனுக்கு மனசைப் போன்ற விரோதியும் எங்குமில்லை. மனிதனுக்கு ஒரு மனசன்று இருப்பது! இரண்டுண்டு. ஒன்று உள்மனசு (The subliminial consciousness); மற்றொன்று வெளிமனசு (The objective consciousness) என்று பேசுகிறார்கள். இவை யிரண்டும் இரட்டைப்பிள்ளைகள் போன்றுள்ளன. சொரூபம் (Essence) ஒன்றேயென்றாலும், இவைகள் குணத்தாலும் சக்தியாலும்; வியவகார காலபேதத்தாலும் பேதப்படுகின்றனவென்ப.

வெளிமனம் உள்மனம்:—வெளிமனம் விழிப்பு நிலையிலுள்ளது. உள்மனம், உறங்கும்போதும் முக்கியமாய்க் கனவு காணும்போதும் பிரகாசிப்பது. வெளிமனம் கண், காது, மூக்கு முதலிய சகாயங்களைக்கொண்டு வெளியுலகத்தை யறியும். உள்மனம் பஞ்சேந்திரிய உதவியின்றியே வெளி உலகத்தையும் அறியும். வெளிமனம் அற்ப சக்தியுள்ளது. உள்மனம் அபார சக்தியுடையது. வெளி மனசுதான் உறங்கி கிடக்கும். உள் மனசு உறங்குவதே கிடையாது. எப்போதும் விழித்துக்கொண்டேயிருக்கும். வெளிமனம் மூளையில் வசிக்கும், உள் மனசுக்கு மூளையினுதவி வேண்டியதில்லை.

பிணியால் வருந்துவோர்:—மேலே நாம் கூறியதை மக்கள் நன்குணராமையால் அநேக கெடுதிகள் விளைகின்றன. ஒருவன் நோயால் பீடிக்கப்பட்டு அதிக துன்பமடைந்து பலம் குன்றியிருக்கும்போது, சனங்கள் புத்தியில்லாமல் நோயாளியின் அருகாமையில் பேசிக்கொண்டிருப்பார்கள். ஐயோ! இது கொடிய நோயாயிற்றே; இப்படித்தான் இருந்தவன் ஒருவன் நேற்று அந்த வீதியில் இறந்து போனானே! என்பார்கள். சிலர்வாயால் இப்படியெல்லாம் சொல்லாவிட்டாலும்மனசால் இப்படியெல்லாம் நினைப்பார்கள். மயக்கமாய்க் கிடக்கும் நோயாளி இதை யறியமாட்டான் என்பது இச்சனங்களின் நம்

சிலரது சுபாவம் எதையும் கடைசியில் ஒப்புக்கொள்வது. முதலிலேயே நியாயத்தை ஒப்புக்கொள்ளாமல் மறுத்துச் சமாளிப்பது. பிறகு தலை குனிவது. இதை ஒரு சமர்த்தாக நம்மூடர் எண்ணுவர்.

பிக்கை. அச்சோ! அச்சோ! அப்படிக்கல்ல, நோயாளி—மயக்க நிலையில் இருப்பதாக நமக்குத் தோன்றினாலும்— அவனுடைய உள்மனம் அற்புதமாக விழித்துக் கொண்டிருக்கிறது. அதுவோ எதை யாவர் எப்படிச் சொன்னாலும் அதைக் கேட்டு நம்பும் தன்மையுடையது.

உள் மனதிற்குள்ள ஒரு குறை:—பத்தியைக்கொண்டு (Reason) யூகித்து விஷயங்களை விசாரித்து அவைதம்மை நிறுத்து, அறியும் சக்தி (The inductive sense) உள் மனதுக்கு இல்லை. ஆகையால் பிணியாளியைப் பார்க்க வந்தவர்கள் சொன்னதை—மனசில் நினைப்பதை ஒரு கணத்தில் அறியும். அறிந்ததை மெய்யென்றே நம்பும்: சாவுக்கு நெருங்கிய நிலையில் தேகத்தைக் கொண்டு வந்து சேர்த்துவிடும். வயித்தியர்கள்—அவர்கள் எவ்வளவு நிபுணர்களாயிருந்தாலும்—அவர்களால் ஒன்றும் செய்ய முடியாது. ஆகையால் இன்னம் சிலகாலம் உயிரோடு இருக்கக்கூடிய ஒருவன் உடனே சிவலோகம்—வைகுண்டம் சேர்ந்துவிட நேரிடும்.

ஆத்ம சக்தி:—அறிவை (ஆத்ம சக்தியை) யறியாமையா லல்லவா பேதைச் சனங்கள் அவதியுறுகின்றனர். பிளேக் காலரா முதலிய வியாதிகளின் பீதியினால் சாகின்றவர் அநேகர் என்கிறார்களே! இடையில் ஒரு சிறு கதை கூறுகிறோம். பம்பாய் மாகாணத்தில் ஒரு மகன் ஒரு பகல், பிளேக் வியாதியைக் கண்டு எங்கே போகின்றாய் என்று கேட்க, அடுத்த பட்டணத்துக்குப் போகின்றேன்; மூவாயிரம் பேரைப் பலி கொள்ளப்போகின்றேன் என்றது பிளேக்கு; இரண்டொரு மாதம் சென்று மறுபடி அம்மகன் பிளேக்கைச் சந்தித்து ஏ! கொடியா! மூவாயிரம் பேரைச் சாப்பிடச் சென்ற நீ முப்பதினாயிரம் பேரையுண்டு ஏப்பமிட்டதென்னை என்றதும்—பிளேக்கானது—இல்லை, இல்லை—மூவாயிரம் பேரை மட்டும் யான் கொன்றேன்; மற்றைபேரைப் பயம் கொன்றுவிட்டது என்று சொல்லிவிட்டுப் போயிற்று. மேலே சொல்லப்பட்ட கதையின் உண்மையை யறியாதவர் யாவர்?

எவ்வளவு பொல்லாதவனுக்கும்— சிலருக்காவது நல்லவனாயிருந்தால்தான் உட்கார ஒரு சதுரம் இடமாவது கிடைக்கும்.

சாந்த எண்ணங்கள்:—சாந்த எண்ணங்களை மனம் சிஷ்டித்துக் கொண்டே வந்தால், பிறருடைய சாந்த எண்ணங்களும் மனசிற் புகுந்து ரக்ஷணம் செய்யும். தேகத்தைப் பலமாகக் கட்டி வைக்கும். சாந்த மனமுடையவர்கள் தங்கள் குழந்தைகளை ஆசிர்வதித்தால் அந்தக் குழந்தைக்குத் தீங்கே நேரிடாது. "நீ சுகத்தோடு வாழ்க" என்று யாம் எமது சிறுவனை ஆசிர்வதிக்கும்போது நமது மனசினின்றும் ஒரு சுக எண்ணம் ஜனிக்கிறது. அந்த எண்ணத்தை எமது மனக் குழந்தையென்று பேசலாம். இந்த மனக்குழந்தையானது அருகில் யாம் இல்லாத காலத்திலுங்கூட எமது செல்வக் குழந்தையை, உடனின்று அந்தக் குழந்தைக்கு தீங்கொன்றும் நெருங்காமல் பாதுகாத்து வருகிறது. ஆகையால் தான் விவாக வேளையிலும், மற்றைய பல சுபகாமான சமயங்களிலும் பெரியோர் சிறியோரை ஆசிர்வதிப்பது. கலியாண காலத்தில் எல்லோரும் சுக வடிவான மனசுடன் கூடியிருக்கவேண்டியது அத்யாவசியம். அதை விட்டு விட்டு நமது ஜனங்கள் அநேகர் கலியாண காலங்களில் ஒருவரோடு ஒருவர் சண்டை பிடித்துக் கொண்டு, சிற்சில சமயம் மணமகனையும், மணமகளையுங் கூட சபிக்க ஆரம்பித்து விடுகிறார்கள். இதென்ன கொடுமை! அறியாமை!

ஆத்மாவின் வியாபாரங்கள்:—நாம் தூங்கும்போது நம்முடைய உடம்பு (தேகம்) மட்டுந்தான் ஓய்வடைகிறது. ஆத்மாவின் வியாபாரங்கள் இடைவிடாமல் நடந்துகொண்டே வருகின்றன. நாம் உறங்கப் போகும் போது, இத்தனை மணிக்கு அல்லது இத்தனை நாழிகைக்கு எழுந்திருக்க வேண்டுமென்று உறுதியாக நினைத்துக் கொண்டு உறங்கினால் அப்படியே அந்த மணிக்கே எழுந்திருப்போம்; என்ன அதிசயம்! ஆத்மா விழித்திருந்து நம்மை எழுப்பி விடுகிறது போலும்!

இரட்டைக் குதிரை சவாரி:— தரித்திரத்தில் இருக்கும் ஒருவன் இரட்டைக் குதிரை வண்டியேறிச் செல்லும் ஒரு பிரபுவைக் கண்டு தனக்கும் அந்த வாழ்வு வரவேண்டுமென்று

என்ன இவ்வளவு செலவுகள் நடக்க வைக்கிறீரே என்றால் அவர்கள் நாளைக்குப் போய்விடுவார்கள் என்கிறான் மனைவி.

நினைக்கிறான்; வந்துவிடுமா? ஆஹா! வந்துவிடும். இரட்டைக் குதிரை வண்டியேறிச் செல்லும் ஒருவனைக் கண்டு நாம் பொறாமைமட்டும் அடையக்கூடாது. மற்றபடி அவனைப் போலவே நாமும் இரட்டைக் குதிரை வண்டியேறிச் சவாரிச் செய்யும் வாழ்வை யபேக்ஷித்தல் குற்றமாகாது. பகவானுடைய ஐஸ்வரியத்துக்கு அளவுண்டோ? பகவானுடைய அருமை மக்கட்குக் குறைவமுண்டோ? கேட்டதெல்லாம் கொடுக்கக் கடவுள் இருக்க நமக்குக் குறைவென்ன? ஆனால், முயற்சிதானில்லை. நான் தரித்திரன், நான் தரித்திரன் என்று ஒருவன் சதா நினைப்பானானால் அவனைத் தரித்திரம் விடவே விடாது என்பதும் மெய். மகா பெரிய மனிதத்தன்மைபோடு நந்துகொண்டு பெற்றோரையும் மனைவி மக்களையும் சோற்றுக்குத் திண்டாட விட்டு, நல்ல காலம் வரவில்லையென்று ஜாதகத்தைப் பார்த்துக் கொண்டு நிற்கிற புத்திசாலிகளே! நீங்கள் வருந்திப் பாடுபடுங்கள், முயற்சியுங்கள்; அப்போது கடவுளும் வழி காட்டுவார். (Try Try Try again).

சுவீகாரம் செய்து கொள்ளல்:—பிள்ளைப் பேறில்லாத சில மாதர்கள் பிறருடைய பிள்ளைகளைத் தத்து எடுத்துக்கொண்டு, அவைகளை வளர்த்து வருவதைக் கண்டிருக்கலாம். அதனால் அவர்களுக்கு லாபம் என்ன? ஆயுசு வளரக் கூடும். மனசுக்குச் சுகம், நரம்புகட்குச் சுகம், தேகத்துக்கும் சுகம். மனிதனுக்குச் சீக்கிரம் பல காரணங்களால் நரம்புச் சக்தி குறைந்து போவதாற்றான் அவன் சீவிரத்தில் இறந்து போகின்றான். நரம்புச் சக்தியை (Nerve Power) பாதுகாத்தால் நெடுநாள் ஜீவித்திருக்கக் கூடும். நரம்புச் சக்தியை அதிகப்படுத்தி மனோசாந்தத்தைக் கொடுக்கக் கூடியது ஒரு குழந்தையின் பால்ய லீலை. அதனால் பரோபகாரஞ் செய்யப் புகுந்தவள், தானே உபகாரம் பிறரிடமிருந்து பெறுகிறாள் என்ப.

குழந்தைகளின் வசீகர சக்தி:—குழந்தைகளிடத்தில் ஆத்ம சக்தி யதிகமாக வெளிப்படுவதால் ... சக்தியானது

மூன்று ரூபாய் கடனகேட்டால் 2-15-0 தந்து விட்டு பாக்கி ஒரு அணா வழியில செலவாகி விட்ட தென்கிறார்கள். அந்த ஒரு அணா இந்த ரூபாய்க்கு வட்டியா?

அன்போடு வளர்க்கும் தாய்க்கும் பிரதிபலிப்பது சகஜம். ஆத்ம சக்தி விசேஷமாக வெளிப்படுவதால் மனம் சாந்தமடையும். மனம் சாந்தமடைந்தால் நாம்புச் சக்தி கெடாது. நரம்புச் சக்தி தான் தேக உறுப்புக்களையும் இரத்தக் குழாய்களையும் இயக்குவதும், தனது அதிகாரத்திற்குட்படுத்துவதுமாதலால், நாம்புச் சக்தி பூரணமாயுள்ளபோது தேகத்துக்குக் கெடுதி நேரிடமாட்டாது. இதைச் சனங்கள் அறிந்து நடந்து கொள்ளவேண்டும். திருஷ்டாந்தமாகப் பிறிதொன்று கூறுவோம்.

ஸஞ்சலவதனியான பால்ய விதவை:—இளம் பெண்கள் இருவர் கைம்பெண்களாய் விட்டார்கள் என்று வைத்து கொள்வோம். புருஷனை யறியாமல் தாலியறுத்துவிட்ட இந்த இரண்டு பெண்களும் நற்குலத்தில் பிறந்தவர்களும், நல்ல குணமுடையவர்களென்றுங் கொள்வோம். இவர்களுக்கு சேர்க்கை வாசனையும் நலமாகவே அமைந்ததாகவே கொள்வோம். கடவுளிடத்தில் மாறாத பக்தியுமிருப்பதாகவும் எண்ணுவோமாக. இருவர்களில் ஒருத்தி தன் புருஷன் வீட்டில் அல்லது தாயார் வீட்டில் இருந்து கொண்டு தன் தலைவிதியை நொந்து கொண்டு பாயிலுறங்காமல் தரையிற் படுத்தும், ஒருவேளை உணவு மட்டும் உண்டும், புருஷனை நினைத்து நினைத்துத் துக்கித்துக்கொண்டே காலம் கடத்துகின்றாள், இவள் கதி என்ன? இவள் பூமிக்கும் பாரம்; பிறருக்கும் பாரம்; தனக்கும் பாரம்; முடிவில் சீக்கிரம் இறந்து போகிறாள்.

ஸந்தோஷ ரூபியான இளம் விதவை:—மற்றொருத்தியோ (இளம் கைம்பெண்) எந்நேரமும் புருஷனை குறித்துத் துக்கித்துக் கொண்டிருந்து பிறரையும் அந்தத் துக்கத்தில் அழுந்தச் செய்தல் பிரயோஜனமற்ற காரியமென்று அறிந்தவளாய்ச் சாதாரண சற்குல ஸ்திரீகளைப்போலவே தானும் உண்டும், உடுத்தியும், உறங்கியும், சந்தோஷமான முகத்துடன்

சிலர் எவ்வளவு படித்த கட்டைகளாயிருப்பினும் பணத்தை முக்கியமாய்க் கவனிப்பதே தவிர, நல்ல புஸ்தகங்களையோ, சிறந்த ஆசிரியர்களையோ, ஒருபோதும் நாடுவதில்லை. அவற்றிற்குச் செலவிடுவதுமில்லை.

யாவரையும் அழைத்துப்பேசியும் உபசரித்தும், தன்னாலான உதவியை யவரவர்கட்கு வலிந்து சென்று செய்தும், துக்கத்திலிருப்பவர்களை சுகப்படுத்தியும், தான் செல்லும் இடங்களில் தைரியத்தையும், உற்சாகத்தையும் ஜனங்களுக்கு வழங்கியும், “பரோபகாரார்த்தம் இதம் சரீரம்” என்ற முதுமொழிக்கிணங்க, எல்லோருடைய வாழ்வையும் தன் வாழ்வாகவும், எல்லோருடைய துக்கத்தையும் தனக்கே நேரிட்ட துக்கமாகவும் கருதி நடந்து உத்தம வழியில் நிற்கின்றாள்.

இவள் கதி என்ன?:—இவளுக்கு ஆயுசு விருத்தியாகும்; மனம் சாந்தமடையும்; ஆத்ம லாபம் கிடைக்கும்; அற்புதமான மறு ஜனனம் வாய்க்கும்; சாகும்போது பரம சந்துஷ்டி நேரிடும்; பகவான் எப்போதும் அவளுடனிருந்து காத்து வருவார்.

தேகம் மனம்:—தேகத்துக்கும் மனசுக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு. தேகம் சுக நிலைமையிலிருந்தால் மனமும் சுகிக்கும். அப்படியே மனசு நல்ல ஸ்திதியிலிருந்தால் தேகமும் நோயின்றியிருக்கும். உயிர் எங்குண்டோ அங்கே மனசு (அல்லது மனோ சக்தி, மனோதத்துவம்) உண்டு. மக்கட்கு மட்டும் மனம் இருப்பதாக நாம் எண்ணப்படாது. உயிருள்ள பிராணிகள் யாவற்றுக்கும் மனம் என்பதுண்டு. மனிதனை நோக்க எறும்பு எவ்வளவு சிறிய ஜெந்துவோ, எறும்பை நோக்க அத்தனைச் சிறிய ஜெந்துக்களும், அவையினும் சிறிய பிராணிகளும் சிருஷ்டியிலிருப்பதாகமேனாட்டுக் கலைஞர்கண்டு பிடித்திருக்கின்றார்கள். அவைகள் யாவற்றினிடத்தும் அறிவு (மனோதத்வம்) இருப்பதாகப் பரீட்சித்துப் படிப்பாளிகள் உணர்ந்தார்கள். ஆயினும், பகவானுடைய பேரறிவை யாவர் அளந்தறியக் கூடும்?

மனோ வல்லமை:—பூலோகத்தில் பெரியோர்கள் அவ்வக்காலத்திலும் மனசின் வல்லமையைக் கொண்டு அநேக அற்புதங்களைச் செய்து முடித்தார்கள்; முடிக்கின்றார்கள்.

பெரியோரைக் கெடுத்த சண்டாளர்கள் மிக்க சாதுபோல் நடிப்பினும் உலகம் அன்னோரை அறியாமலில்லை.

இனி மேல்வருங்காலத்திலும் முடிப்பார்கள். புலி, கரடி, சிங்கம் முதலிய துஷ்ட மிருகங்களையும், பாம்பு நண்டுத் தேளுக்கால், செந்தேள், செய்யான் முதலிய ஜந்துக்களையும் மனோவல்லமையினால் ஒருவன் ஜெயித்து விடக்கூடும். மனம் தான் நரகத்தையுண்டாக்கும்; மனந்தான் சுவர்க்கத்தையும் தரும். மனசு நஷ்டப்பட்டால் அதே நரகம்; மனசு சுகப்பட்டால் அதே சுவர்க்கம் என்று சொல்லுவார்கள். மனசினுடைய வேகமும் அசாத்தியமாகும்; அவனுடைய வியவகாரங்களும் அதிவிநோதமானவை.

பயத்தின் தன்மைகள்:—ஐயா! வெகு பேர் பொழுது போனவுடனே "பயம் பயம்" என்று பயத்தைக் கண்டு பயப்படுகிறார்கள் அல்லவா? இதை பொழிப்பதெப்படி? பயம் என்ற நாய் இருக்கிறதே ஐயா, அநேகம் பேரை மிரட்டி யடிக்கும்; அவசரத்தில் அதைப் பார்த்தால் அது ஒரு பெரிய கோர வடிவோடும் தோன்றும். இதை சற்றே உற்று நோக்கினால் அதனுடைய உண்மையான சொரூபம் (அற்ப நாய் வடிவம்) உடனே வெளியாகும். சில வயல்களில், சில தோட்டங்களில் காக்கை முதலிய பட்சிகளை மிரட்டுமாறு மனுஷனைப்போலப் பொம்மை பண்ணி வைத்திருப்பார்கள். இரவட்டில் அதைப் பார்த்து சில மூட ஜனங்கள் யாரோ மனிதன் தான் நிற்கின்றான் என்று பயப்படுவதுண்டு. ஆனால், அருகிற் சென்று உற்றுப் பார்த்தால் சட்டியும் பானையும் தான் நிற்கும். தடியாலொரு அடி போட்டால், பொட்டென்று சட்டி மனிதன் கீழே விழுந்து நாசமடைவான். அது போலப் பயம் என்ற அந்தகாரத்தைச் சற்றே எதிரிட்டுச் சீ, நில் நாயே! என்று சொல்லி, ஒருவன் உற்று நோக்கினால் அது பூஜ்யமாய் (சூன்யமாய்) விடும்; ஒன்றும் வாஸ்தவத்திலிராது. இந்த நாய் நமது மனசினுடைய சிருஷ்டி; மனசாகிய டியினால் தான் இதைக் கொல்ல வேண்டும். ஆமாம், ஐயா! இதை எப்படிப் போக்குவது; அதைச் சொல்லும், என்ற சிலர் எம்மை யடிக்கடி கேட்கின்றார்கள்.

தேள் தன் அருகில் வரும்போது திடீரென்று நித்திரையிலிருந்து விழித்துக் கொள்கிறான். படுக்கைக்குப் பக்கத்தில் தேள் தெரிகிறது. கடிக்குத் தப்பியது கெட்டவேளை வாராததாலா?

பய நிவர்த்திக்கு மந்திரம்:- பயத்தால் பீடிக்கப்பட்ட ஒருவன், தான் இருட்டு வேளையில் எங்கேயாவது தனிமையாக, தனி வழியே போகும் போது, இந்த மாதிரியாக மனசில் தியானம் செய்து கொண்டே போகவேண்டும். "பயம் கிடையாது; யான் பயத்தை வென்றுவிட்டேன்; என் மனம் தீரமே உருவெடுத்து வந்தாற் போல் ஆய்விட்டது; பயமில்லை பயமில்லை, பயம் போய்"—இப்படித் தியானம் செய்து கொண்டே தனி வழி நடந்து போகும்போது, பயத்தை ஒரு நாயாகப் பாவித்து, தன்னை ஒரு நாயடிப்போனாக எண்ணி தைரியம் என்ற கொம்பைத் தான் கையில் பிடித்திருப்பதாகவும் எண்ணிக் கொண்டு, "பயம் என்ற நாய் தலை 'இலை' காட்டினால் தடியால் அடித்துக் கொல்வேன்" என்று சங்கல்பம் செய்து கொண்டும், பாதையில் எந்த இடத்திலாவது கொஞ்சம் பயம் வந்தாலும் கூட, "இதோ அற்ப நாய் தலை காட்டுகிறது; இதோ போடுகிறேன் தடிகொண்டு அதன் தலை இரண்டாகும்படி" என்று தான் தைரியம் என்ற தடியை எடுப்பதாய்ப் பாவனை மனசில் செய்ய வேண்டும். தடியை எடுத்தவுடனே நாய் பறந்தோடி விடும்; மறுபடியும் தலைகாட்டவே காட்டாது; ஒரு வேளை தலை காட்டினாலும் உன்னிடம் தடி தான் தயாராகவே இருக்கிறது; போடு தடியால்; தயை தாட்சண்ணியம் வேண்டாம். இப்படிச் சிலகாலம் மனோதியானமும் மனோபாவனையும் செய்து வந்தால் பயம் ஒருவனை விட்டு அறவே ஒழிந்து போகும். இதை நீ அநுஷ்டித்துப் பார்.

கோபத்தின் குணபாவங்கள்,—கோபம் என்கிற சண்டாளன் அடிக்கடி நம்மை எதிர்த்துப் போர் செய்வான். வெகு ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். பெரிய அபாயங்களை எல்லாம் இந்தப் பபோவிப் பயல் செய்து விடுவான். சில வேளை ஒருவனை ஒரு கணத்தில் கொன்றும் விடுவான். அடடா! துர்வாசர், விசுவாமித்திரர் முதலிய மகான்களும் சில வேளை இந்தச் சண்டாளனால் மதிகெட்டு போனார்களாமே; அம்மம்மா! இவன் விஷயத்தில் வெகு ஜாக்கிரதை செய்யவேண்டும்.

பழைய எஜமானனை 'அவன்' என்பது, புதிய எஜமானனை அவர் என்பது- இது உலக வழக்கம்.

கோபம் எப்படி வருகிறது?:—“ஆறுவது சினம்” என்று சொன்னாள் அம்மை. கோபத்தை எப்படி ஜயிக்கலாம்? கோபத்தின் பேரில் (கோபம் என்கிற துஷ்டன் பேரில்) நம்முடைய கோபத்தைச் செலுத்தவேண்டும்; கோபத்தைக் கோபிக்க வேண்டும். கோபம் வருகிறதல்லவோ; நன்றாய்த் தான் தெரிகிறதே கோபம் வருகிற சமாச்சாரம். அடாடா டா! என்ன வேகம் ஐயா அந்தக் கோபத்துக்கு! என்ன கம்பீரம்! என்ன சக்தி! பல் நறநறவெனக் கடிக்க, மீசை துடிப்ப, நரம்பு உதற, தேகம் நடுங்க, ஆள் குலுங்க, புத்தி தடுமாற, உதிரம் பொங்க, உடலம் புழுங்கிச் சூடெடுப்ப, அடடா என்ன வேகமடா—என்ன—அட்டகாசம்—என்ன சக்தி!

கோபத்தை வெல்லும் வழி:—நீ ஒன்றுசெய்! இப்படிக் கோபம் புறப்பட்டு வரும்போது, சற்று நிதானி! கோபத்தை எதிரிட்டுப் பார்; வாருங்கள் வாருங்கள் என்று சொல். “ஆ! ஹா! இவ்வளவு வேகம்—சக்தி—இவ்வளவு கம்பீரம்—வெளிப்பட்டுப் போய்விட்டால் எப்படி? தயை செய்து உள்ளுக்குப் போங்கள்—உள்ளுக்குப் போங்கள்; உங்களுடைய உதவியும் நட்பும் நமக்கு அவசியம் வேண்டும். தயவு செய்து உள்ளேயிருங்கள்” என்று சொல்லி, புறப்பட்டு கர்ச்சித்து வந்த கோபத்தைக் கவளீகரம் செய்துவிடவேண்டும்; அதாவது சாப்பிட்டு ஜீர்ணித்துவிடவேண்டும். ஜீரணமாவதற்கு உதவி செய்யும்படி கடவுளுடைய சுத்த ஆகாயத்தை மூன்று தரம் பூரணமாக உட்கொண்டு சந்தோஷிக்க வேண்டும்.(Take three deep breaths)பாருங்கள் எவ்வளவு வசீகர சக்தி வந்து விடுகிறது உங்கள் தேகத்துக்கு! இப்படி ஒரு தரம், இரண்டு தரம்,மூன்று தரம், பத்து தரம் கோபத்தை வென்று அப்போதப்போது வந்த கோபத்தின் சக்தியைச் சாப்பிட்டு ஏப்பமிட்டு விட்டால் பிற்பாடு கோபம் வரவே வராது; சாந்தம உண்டாகும்; சுகம் வந்திடும். வசீகர சக்தி தேகத்துக்குண்டாகும். எல்லோரும் தழுவுவார்கள். நீ இட்டதே சட்டம்,சொன்னதே வேத வாக்கியம்; ஜனங்கள் உன்னைக் கண்டு அச்சமடைவார்கள்; மிருகங்கள்கூடப் பயந்து நிற்கும்.

நடுஇருட்டில் கூடத்தனக்குத்துணைவந்து உதவுகிறகாலசகாயு நண்பர்கள் சிறந்த ஆபரணங்களாவார்.

கோபத்தை இப்படி ஆறவிடவேண்டுமென்ற பொருளுடன் தான் "ஆறுவது சினம்" என்றாள் ஔவை.

மஹாவசியம் அற்புதவாழ்வு:—உனக்கு அநேக விரோதிகள் இருக்கக்கூடுமல்லவா? ஆம், உலகத்தில் யாருக்குத் தான் விரோதிகளில்லை? இவர்களை எல்லாம் ஒரே காலத்தில் வென்று விடுவதெப்படி? நீ உள்ளபடியே சுகப்படுவதெப்படி?

அதற்கு விடை:—காலையிலும் மாலையிலும் உறங்கு முன்னும் அரை நாழிகை நீ ஒன்று செய்யவேண்டும். உள்ளே சென்று கதவுகளை யடைத்துக் கொண்டு மோனத்தை (Silence) அதாவது மௌன விரதத்தை அநுபவிக்கவேண்டும். கால் நாழிகை பரியந்தம் "எல்லோருக்கும் சாந்தம் உண்டாக! எல்லா ஜீவர்கட்கும் சுகம் உண்டாக! எல்லா ஆன்மாக்களும் நன்மையே பெறுக" என்று தியானம் செய்யவேண்டும்; பிறகு கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்திடவேண்டும். பத்து நாளைக்கெல்லாம் உலகமெல்லாம் உன்னை நேசிக்கும்; விரோதிகளெல்லாம் சிநேகராய் மாறி விடுவார்கள். துஷ்ட மிருகங்கள், துஷ்ட ஜெந்துக்கள் உன்னைத் தீண்டமாட்டா; உனக்கு எல்லாம் நன்மையாகவே முடியும். உன்னுடைய தேகத்திற்குப் புதுமையாக ஆரோக்யமுண்டாகும்; உன்னுடைய மனசுக்குப் புதுமையாகத் தீரமுண்டாகும்; மேற்படி பேசப்பட்ட அறை உன்னுடைய ஹிருதயம்; கதவுகளோ, கண் காது முதலிய இந்திரியங்கள் என்றறியக்கடவாய். ஒவ்வொருவனும் கடவுளோடு ஒன்று பட்டிருப்பதால், அதை உள்ளபடியே உணர்ந்து அவன் ஒன்றைக் கோரினால் அது அவனுக்குக் கிடைக்கத் தடையில்லை.

மண் பானையில் சப்தம்:—வெண்கலம் முதலிய லோகத்தால் செய்த பாத்திரங்களில் ஜலம் எடுக்கும்போது சொம்பு மோதி உண்டாகிற சப்தத்தை மண் பானையிலும் காட்ட முயன்றால் அது வாயைத் திறந்து கொள்ளும். பிறகு ஒரு சொட்டு ஜலம்கூடக் கிடைக்காது. மண் பானை என்கிற ஞாபகம் எப்போது தவறுகிறதோ அப்போதே அதற்கு முடிவு காலம் வந்துவிடும்.

அவசியம் ரேயிலுக்கு வா:—"வருகிறேன்" என்ற கடிதத்தை நம்பி ரயிலுக்குப் போய்க் காத்திருப்பதில், எதிர்பார்த்தவர் வாராமற்போகவே அதனால் உண்டாகிற வருத்தம் எல்லா வருத்தத்திலும் ஏமாற்றத்திலும் பெரியதாகும்.

காதலுக்குக் கல்யாணமா? கல்யாணத்திற்குக் காதலா? உண்மையாகச் சொல்லப்போனால் காதலுக்குக் கல்யாணமல்லால் கல்யாணத்துக்குக் காதலல்லதான். ஆனால் உலக அநுபவமே வேறு மாதிரியாக இருக்கிறது. கல்யாணம் செய்துவிட்டோமே யென்று காதலிக்கிறோமே யொழிய—காதலிக்கிறோமே யென்று கல்யாணம் செய்வது இல்லை.

கிளப்:—கிளப் என்றால் சாப்பாட்டுக் கடைகள் என்று ஒரு அர்த்தம். நாகரீகமான அர்த்தத்திலே 'கிளப்' என்பதற்கு பணப்புஷ்டியுள்ளவர்களிற் சிலர் ஒன்று சேர்ந்து உற்சாகமாய்க் காலங்கழிப்பதற்கு ஸ்தாபித்திருக்கும் இடம் என்று பொருள்படும். கையில் நாலுகாசு ஏறினால் எல்லா வைபவமும் உண்டுதான்.

பஹிரங்கமான கள்ளுக்கடை:—காபி ஹோட்டல்கள் பஹிரங்கமான கள்ளுக்கடைகளைப்போல் பிரகாசிக்கின்றன. இந்தியாவுக்குத் தேவையான ஆசார சீர்திருத்தம் இங்கிருந்துதான் உற்பத்தியாகிறது. வீட்டிலே காபி பலகாரம் சாப்பிடுவதானால் எல்லாருக்கும் சப்ளை செய்யவேண்டுமென்றெண்ணி, ரகசியமாக இங்கு வந்து வயிற்றைத் தடவிக்கொண்டு செல்வர். இதுவும் ஒரு நாகரீகமே. காபி டம்ளர் பாதி வாய்க்குட் செல்வது இன்னும் நாகரீகம்!

நன்றாகச் சாப்பிட்டுவிட்டுப் போ:—பந்துக்களைப் பார்க்கப்போகும்போது நன்றாக உன் வீட்டில் சாப்பிட்டு விட்டுப் போ. அப்போது பந்துக்களிடம் அதிக மரியாதையை நீ பெறுவாய். நீ சாப்பிட வரமாட்டாயென்று அவர்களுக்குத் தெரிந்துபோனால் நீ வரும்போதெல்லாம் உன்னைச் சாப்பிடச் சொல்லிக் கட்டாயம் செய்வார்கள். அது உனக்கு வெகு

சத்தியம்-பரிசுத்தம்-அன்பு-இதில்தான் மேலான ஜீவியவாழ்வும் அடங்கியுள்ளது.

கௌரவமாகும். ஒரு முறை உம்--என்று சாப்பிட்டு விட்டாயோ பிறகு உன்னைக் கூப்பிடவே மாட்டார்கள்- உன்னைக் கண்டாலும ஜாடையாகப் போய்விடுவார்கள். ஆனால், ஒரு போதும சாப்பிடாதே. பந்துக்களைவிடப் பத்து பங்கு உபசரிக்க ஹோட்டல்கள் தயாராயிருக்கும்போது நீ ஏன் பின் வாங்கவேண்டும்?

சில்லரை கேட்கக்கூடாது:—நாவிதனுக்கு எவ்வளவு கொடுக்கவேண்டுமோ அதை க்ஷவரம் செய்து கொண்டபிறகே தரவேண்டும். ஏனெனில், நம்மைப் பற்றிப் பிரமாதமாக நினைத்திருப்பான். முதலிலேயே தந்துவிட்டால் இவ்வளவு தானா என்று போய்விடும். பணத்தைக் கொடுத்து பாக்கியைத் தரும்படி கேட்டால் தரவே மாட்டான். என்னங்க சாமி என்பான்; கும்பிட்டு அப்படியே எடுத்துக்கொள்ளவே பார்ப்பான். அவனிடம சில்லரை கேட்கக் கூடாது.

கோபம்:—அதிகமான கோபாவேசத்துட னிருக்கிற ஒரு பெண் அந்தக்கோப சமயத்தில் தன் குழந்தைக்குப் பால் கொடுத்துக் கொண்டிருந்தாளானல், அந்தப் பால் விஷமாக மாறிவிடும். கோபத்தின் கொடூரம அத்தகையது. அந்தப் பாலையுண்ட குழந்தை உடனே நோயுற்றுத் துன்புற்றுப் பலவீனப்பட்டுப் போய்விடும். கோபமே அபரிமிதமாக ஒருவனைப் பிடித்துக்கொண்டாலும் அவனைக் கொன்றுவிடும். அல்லது பித்தனாகச் செய்துவிடும். மகாலோபியினுடையவும் கோபியினுடையவும், வேர்வையையும்,எச்சிலையும் எடுத்துப் பரீட்சித்து. அவற்றில் விஷத்தன்மை இருக்கிறதென்று பண்டிதர் கூறுகின்றனர். ஆகையால் கோபத்தைவிட்டுச் சாந்தத்தையடையவேண்டும்.சாந்தம் உயிரை வளர்க்கும். கோபம் உடலைக் கொல்லும். உடலுக்கு விஷத்தைக் கொடுக்கும். உயிரையே ஓட்டிவிடும்,

அகக்கண் புறங்கண்:—புறக்கண்ணை எல்லோரும் அறிவார்கள்,அகக்கண்மட்டும் பலருக்கு வெளிப்படாது; சிலருக்கு

பார்ப்பான சோறு பசிக்கு உதவாது எனகிறார் ஒரு பிராமணர். ஏனெனில் தாம் புசித்த பிறகே பிறசாதியாருக்குப் போடுவாராம். இது முற்றிலும் உண்மையல்ல,

மட்டும் தோன்றும். அகக்கண் என்பது யாது என்ற மக்கள் கேட்கின்றனர். அகக்கண் என்பது அறிவு என்று கூறுவோம். அறிவு தான வெளிப்பொருள்களைக் கூட வெளிக்கண் மூலமாகக் காண்கின்றது. வெளிக்கண் நமது தேகத்துக்கு ஒரு சாளரம் (சன்னல்) போலிருக்கிறது. சன்னல் திறந்திருந்தாலுங் கூட, வீட்டுக்குள்ளிருக்கும் மகன் சன்னலருகாமையில் வந்து நின்றால்தான், வெளியே போகும் மனிதர் வண்டி, ஆடு மாடு வேடிக்கைகளைக் காணக்கூடும். ஒரு வீட்டில் வசிக்கும் ஒரு மகன் அவ்வீட்டிலுள்ள பல அறைகளில் ஒன்றனுள் இருந்துகொண்டு, யாதாமொரு வேலையைச் செய்து கொண்டிருந்து விட்டானானால், அந்த வேலைசெய்யும் சமயம் (காலம்) அந்த வீட்டின் வெளிச்சாளரங்கள் திறந்து இருந்தாலும், அவன் அவ்வீட்டுக்கு வெளிப்புறத்தில் நடக்கும வேடிக்கைகளைக் காண முடியாதல்லவா? அதுபோலவே, அறிவு [நமது தேகத்தினுள்ளே வாழும் பொருள] கண் மூலமாக ஒன்றைக் காணவேண்டினாற்றான் காணும். கண் திறந்து இருந்தாலும்; அறிவாகிய புருஷன் வேறிடத்திற்குச் சென்றிருந்தால், [வேறு விஷயங்களை நினைத்துக்கொண்டிருப்பானானால்]கண் திறந்திருந்தும் காணான்;காதிருந்தும ஒன்றையுங் கேளான; மூக்கிருந்தும் ஒன்றையும் முகரான்; நாவிருந்தும்ருசியறியமாட்டான்;பரிசஉணர்ச்சிThe sense of touch யிருந்தும் யாதொன்றின் பரிசமும் உணரமாட்டான். மனம் வேறு இடத்தில் வேறு சிந்தையில் வேறு விஷயத்தில் சென்றபோது கண்ணை மூடாமல் திறந்துகொண்டிருந்தாலும் தன் முன்பாக நடக்குங் காரியங்கள் எவற்றினையும் ஒருவன் அறியவேமாட்டான்.

தெய்வ வசியம்:—“அண்டாண்ட சராசரங்களை யெல்லாம் தனது கர்ப்பத்தில் அமைத்துக் காத்துவரும் தேவதேவன் என்னைக் காவாமல் கைவிடுவேனோ? விடான விடான்; எனக்கு மகாதேவன தாயினுமினியன்; அம்மட்டோ? எனனினுமினியன்—என்னைப் பற்றியும் என் பெண்டு பிள்ளை பண்ட பதார்த்தங்களைப் பற்றியும எனக்கேன் கவலையிருத்தல் வேண்

பிறவிச் சுபாவமென்பது மற்ற எந்த குணத்தையும் அடக்கித் தானே மேலாக வந்து நிற்கும்.

டும்? அவன்றன் திருவுள்ளம்போலாகுக! எல்லாம் அவனே! எல்லாம் அவன் செயலே; எல்லாம் அவன் பொருளே" என்று இன்னோரன்ன மாதிரியாகச் சிந்தித்துக் கொண்டிருந்து விட்டால் துக்க மொழியும், பய மொழியும், கவலையொழியும், சுகம் பெருகும், ஆனந்தம் பொங்கும், அற்புதம் நேரிடும். இந்தத் தெய்வ வசியத்தின் பெருமையைப் பேச எவரால் முடியும்?

பாவனாசக்தி:—யாது பாவித்திடினும் அதுவாய் விடுதல் கூடும். மனதுக்கு இந்த சக்தியுண்டு. வீரருடைய சரித்திரத்தைப் படிப்பதனால் நமக்கும் வீரமுண்டாகும். பயங்கரியைப்பற்றிப் பேசுவதாலும் பயமே யுண்டாகும்; பயங்கர கதைகளைக் கேட்பதனாலும் நாம் பயத்தை யடைந்து விடுவோம். யாது பாவித்திடினும் நீ அதுவாதலுண்மை.

பேராசை:—உலக அனுபவத்திலே பல பேராசைகளின் முயற்சியினாலேயே, பிறகு ஒரு உத்தமமான காரியம் நடைபெறுகிறதென்பதை நாம் அறிவோம். ஆசைமிகுதிப்பட மனோ உற்சாகமும் தூண்டுதலும் அதிகமாவதால் இந்த ஊக்கம் வேறு பல காரியங்களிலும் சென்று காரிய நிறைவேற்றத்தைப் பயக்குந்தானே!

மனோவசியம்:—மனதின் ஸ்வபாவத்தையும், வேகத்தையும் சகதியையும் உள்ளபடியே உணர்ந்து அம்மனம் உணர்ந்ததின் அரும்பயனாகப் பலவழிப்படரும் அம்மனத்தை ஒருவழிப்படுத்தி (அஃதாவது அதன் கிரணங்களை ஒருதனியிடம் அல்லது விஷயம், அல்லது பொருளின்கண் செலுத்தி, நன்மை யடைந்து க்ஷேமப்படும் வித்தையைத்தான் மனோவசியம் [Mind control] என்று பெரியோர் கூறுகிற்பர்.

ஹிப்னாடிசம்:—ஹிப்னாடிசம் என்ற வித்தையைக் கொண்டு செயல்களைச் சிலர் செய்து நீக்கினார்களாம். ஸப்த

பலமும எண்ணமும்மே யாவற்றைக் காட்டிலும முக்கியமான வை. ராவண குணத்தையும, ஸ்திரீ இச்சையையும் ஜெயித்துவிட்டால அவனே உண்மைத் துறவி

முனைரும் நாம்பை முன்னிலும் மிகச் சுறுசுறுப்பாயிருக்கும்படி செய்வதற்கு அந்த ஹிப்னடிக் நிலை ஸாதனமாயிருக்கிறதென்ப. அப்படியே, கண் வலிவு குறைந்துகொண்டு வந்தால் அதையும் அந்த வித்தையைக் கொண்டு நியக்கி கண்ணுக்கு அதிர்தம் செய்பலா மென்ப. தன்னிடம் நம்பிக்கை யுள்ளவனுக்குக் கடவுளிடம் நம்பிக்கை யுண்டாகும். நம்பிக்கை யில்லாதவனல் ஒன்றும் செய்ய முடியாதென்ப. மானவஸீக வித்தை பரமபகியோடு ஐக்கியமானர்க்கே கிரமமாய்க் கைகூடும். குருவருளோடு ஐக்கியப்பட்டே இதையும் முடிக்கவேண்டும்.

இறந்தவனின் ஆசை:—உயிர்விட்டவுடனே அல்லது சில நாழிகை பொறுத்தாவது உயிர்விட்ட மனிதன் அல்லது இறந்தவள் பல்லாயிர மைல் தூரத்திலுள்ள தனது தாய் தந்தை பெண்ஜாதி புருஷன் பிள்ளை பெண் முதலிய பந்துஜனங்களில் யாதா மொருவருக்கு அல்லது சிலருக்கு நிஜரூபமாய்த் தோன்றுவதுண்டு. கனவிலும் வருவதுண்டு. இது பல பல இடங்களில் காணப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் யாது? இறந்தவனின் ஆசை தானே!

கொலையுண்ட மனிதன்:—ஒருவனைச் சிலர் கொன்றுவிட்டு அகால மரணத்திற்குள்ளாக்கி ஊரைவிட்டு ஓடிப்போய் விட்டார்களானல் அவன் இறந்த இடத்தில் தினம் தினம் அந்தக் கொலை நடப்பதாகத் தோற்றமும் கூச்சலும் பய முதலியவும் இரவில் உண்டாகின்றனவாம். கொலை செய்தவர்கள் கிடைத்து சிக்ஷைபடைந்த பிற்பாடு இறந்த இடத்தில் பழய கூச்சலும் பயங்காக்காட்சியும் நிகழ்வதில்லையாம். இது என்ன அறிவிக்கிறது? இறந்தவன் உயிர் சாகிறதில்லை யென்றும், சாகும் சமயத்தில் அவன் எண்ணம் திரண்டு உருப்பெற்று, அவன் இறந்த இடத்தில் நின்றுகொண்டு பல கூத்துகளைச் செய்கிறதென்றும், கொலை செய்தவர்கள் கிடைத்தவுடனே இறந்தவன் ஆன்மா ஒருவித மன அமைதி யடைவதால் அவன் எண்ணத்தின் உருப்பெற்ற தோற்றங்கள் மறை

மனைவியின் கொடுமை எவ்வளவு மிஞ்சினாலும் அந்த இருட்டறையினின்றும் வெளிப்பட வழிதெரியாமல் அங்கேயே தடவிக் கொண்டிருப்போர் எத்தனை பேர்;

க்குபோகின்றனவென்பதும் பிரகாசமாகும். எனவே, இறந்தவர்கள் இருப்பவர்கள்மீது ஆசையோடு இருக்கின்றனர் என்பது உண்மை. பிணம் விழுமுன்னும், விழுந்தபின்னும் மக்கள் காக என்றுகத்தி கூப்பாடிட்டழப்படாது. அது சாஸ்திர சம்மதமன்று.

ஜலத்தில் மூழ்கி இறப்போர்:—குளம் குட்டை ஆறு ஏரியில் வீழ்ந்திறக்கும் ஒருவனுக்கு அவன் இறக்கும் தருவாயில், அவன் ஆயுசு முழுவதும் நடந்த விஷயங்களெல்லாம் ஒரு கணம் அவனுக்கு ஸ்பஷ்டமாகத் தோற்றமாகும் என்று ஐரோப்பிய பண்டிதர் அறிந்து [பரீக்ஷித்து]க்கூறுகின்றனர். முதலில் விழுந்ததும் எதையாவது பிடித்துக்கொண்டு நிற்க அவன் மனம் தாவுகிறது. ஆரம்பத்தில் அவன் அப்படி முயல்கின்ற நினைவுடனேயே இருக்கிறான். பிறகு ஞாபகம் தவறி விடுகிறது.

இரண்டு வாழ்வு:—நமக்கு [மனிதர்க்கு] ஒவ்வொருவர்க்கும் இரண்டு வாழ்வு உள்ளன. ஒன்று [The soul life] ஆத்ம வாழ்வு; இது கடவுளிடத்திலிருந்து நேரில் நமக்குக் கிடைத்துள்ளது. இதுதான் நம்மைப் பகவானுக்கு உறவாக்கி வைப்பது. மற்றொன்று மனிதருக்கு உள்ளது; உலக வாழ்வு [The physical life] என்று கூறுப. இந்த உலக வாழ்வுதான் நம்மை உலகத்தோடு ஸம்மந்தப்படுத்தி வைத்துள்ளது.

எண்ணங்களின் வாழ்வு:—நமது எண்ணங்களின் வாழ்வு [The thought life] தான் உலக வாழ்வையும் ஆத்ம வாழ்வையும் ஒன்றோடொன்று சேர்த்து வைத்திருக்கிறதென்ப. இந்த இரண்டு வாழ்வுகளுக்குமிடையில் நின்று விவகரிப்பது எண்ணங்களின் வாழ்வேயாகும்.

எண்ணங்களுக்குள்ள ஈர்க்கும் சக்தி:—மனசின் எண்ணங்கள் அவைபோன்ற பலருடைய *எண்ணங்களையும் ஈர்க்கும், அதாவது இழுக்குமென்ப. ஒருவன் புதிதாய் நூல் எ

* வீட்டுப் பெண்களுக்கு நல்லவர்களாக நடந்துகொள்ளப் பார்ப்போரிலும் வஞ்சகர் பலர் உண்டு.

மூழ்கிறான். அவனுடைய எண்ணங்கள் அவனுக்கு முன்னிருந்த கிரந்தகர்த்தர்களின் எண்ணங்களைக்கூட, அதாவது அவர்களுக்குண்டான யோசனைகளைக்கூடத் தனக்குள் இழுக்கின்றன; அதாவது கிரகிக்கின்றன. உதாரணமாக:—ஒரு குடிகாரன்: ஒரு கிளாசு சாராயம் சாப்பிட எண்ணங்கொண்டு சாராயக்கடைக்குப்போகின்றான். அங்கே இவனுக்கு முன்னதாகப் பலர், முதல் முதலில் கொஞ்சமாகக் குடிக்க நினைத்துப் பல கிளாசுகள் குடிக்க முற்பட்டதின் சம்பந்தமான எண்ணங்களெல்லாம் ஒரு திரட்சியாகச் சேர்ந்து நிற்கின்றன. அப்படிப்பட்ட இடத்தில் இவன் போய் ஒரு கிளாசு சாப்பிட்டவுடனே, மறுபடியும் ஒரே கிளாசு மட்டும் சாப்பிட்டுவிடலாம் என்ற எண்ணம் இவனுக்குண்டாகிறது; சாப்பிடுகிறான். மறுபடியும் ஒரு கிளாசு—ஒரு கிளாசு—ஒரு கிளாசாகப் பல கிளாசானவுடன் தன் சுவாதீனமிழந்து விழுந்து விடுகிறான். இதற்குக் காரணம் என்ன? அவ்விடத்தில் ஒன்றாகத்திரண்டு நிற்கின்ற மற்றக் குடிகாரர்களின் எண்ணங்கள் இவனுடைய மூளையில் வந்து குடிபுகுந்து அவர்களைப்போலவே இவனையும் நடக்கும்படி தூண்டுவதால்தான். ஏன் நீ கடிதம் எழுதவில்லையென்று ஒருவனுக்கு நாம் கடிதம் எழுத முற்படும்போது நமது எண்ணங்கள் அநேக நூறு மைல்களுக்கப்பாலிருக்கிற அவனுடைய எண்ணங்களை இழுப்பதால், அவனுக்கும் ஞாபகம் உண்டாகி நாம் இங்கு கடிதம் எழுதுகிற நேரத்திலேயே அவனும் அங்கே நமக்குக் கடிதம் எழுதிக்கொண்டிருக்கிறான். நாம் கடிதத்தைத் தபாலில் போட்ட மறுநாள் அவன் கடிதம் நமது கைக்கு எட்டுகிறது. உன் கடிதமேயில்லையே என்று நேற்றுத் தானே அவனுக்குக் கடிதம் எழுதினோம் என்று நாம் இங்கே வியக்கின்றோம். இது அநுபவம்.

தன்னறிவு:—மனிதரில் எத்தனை மிருகங்கள் இருக்கின்றன; தன்னறிவு (self-consciousness) சிலருக்குத் தாம் உண்டு; பலருக்குக் கிடையாது. தன்னறிவு இல்லாதவர்கள் தான் ஆடு மாடுகள் மாதிரிக் கிடப்பவர்கள். தன்னறிவு உள்ளவர்கள்

எவ்வளவு வெட்டிவிட்டபோதிலும் ஒட்டிக்கொள்ள முயலும் வஞ்சகர்கள் பயங்கரமானவர்கள்,

தாம் வாஷிங்டன், நபோலியன், நெல்சன் முதலிய பிரமுகரைப்போல் அநேக ஆயிர ஜனங்களை யடக்கியாண்டு மேன்மை யடைந்தவர்கள். கிறிஸ்து, மகம்மது, புத்தர், சங்கரர், இராமானுஜர் முதலியோரைப்போன்று லோகத்தை இரட்சிப்பவர்கள்.

ஆத்ம சக்தியை வெளிப்படுத்துபவை:—

(1) தைரியம்.
(2) உறுதியான எண்ணம்.
(3) நம்பிக்கை.
(4) சந்தோஷ குணம்.
(5) ஆநந்தம்.
(6) ஆசை.

இவைகள் ஆத்ம சக்தியைப் வெளிப்படுத்தும் தன்மையுள்ளன.

ஆத்ம சக்தியைத் தடுத்துவிடுபவை:—

(1) விசனம்.
(2) ஆழ்ந்த வருத்தம்.
(3) பயம்.
(4) கவலை.
(5) முணுமுணுத்துக்கிடத்தல்.
(6) சோம்பல்.
(7) கோபம்.
(8) தைரியத்தை யறவே கைவிடல்.

இவைகள் யாவும் ஆத்ம சக்தியை வெளிப்படாமல் தடுத்துவிடும் தன்மையன; மனோ சக்தியை பறித்துவிடும் தன்மையன; தேகவலிவையும் ஆரோக்கியத்தையும் நாசம் செய்துவிடும். தேகத்தையே சீக்கிரத்தில் அழித்தும் விடுவன.

ஞாபகசக்தி.—ஞாபகசக்தி வெளிமனசுக்கு அற்பமே தவிர அதை ஸ்திரமாகவும், நம்பிக்கையுள்ளதாகவும் நினைக்கக்கூடாது. உள்மனசில் ஆயுசில் நடக்கும் விஷயங்களெல்லாம் அப்படி யப்படியே பதியப்படுகின்றன. சிலவேளை மனிதர் திடீரென இறந்துபோகிற சமயத்தில் அவர்கள் ஆயுசில் நடந்தேறிய விஷயங்களெல்லாம் அவர்கள் முன்பாக ஒரு கணத்தில் தோன்றும் என்ப. உள்மனசுக்கு எவர் சொன்னாலும் அது உண்மை யென்றே நம்பும். கனவிற் காணும் விஷயங்கள் யாவையும் நாம் அந்தச் சமயத்தில் உண்மை யென்றே நம்பவில்லையா? ஞாபக சக்தி உள் மனசிலேயே அதிகம். நாம யோசிக்கும்பொழுது உள்மனசு வேலைசெய்யத் தொடங்கி அத

உறவினரின் வீட்டில் வறியனென வசிப்பதிலும், நண்பனின் வீட்டில் ராஜனென நிற்பது நன்று.

துள் பதிந்து கிடக்கும் யோசனைகளை ஒவ்வொன்றாக நமக்கு எடுத்துக் கொடுக்கின்றன. சில சமயங்களில் அது அதிக சிரமத்துடன் அந்த யோசனைகளை நமது ஞாபகத்திற்குக் கொண்டுவரவேண்டியிருப்பதால் நாம் மறந்துவிட்ட யோசனையை நாம் நினைவுக்குக்கொண்டு வரமுயன்றும், அப்போது முடியாமல் பிறகு திடீரென்று நமது ஞாபகத்துக்கு வருகிறது. அப்போதுதான் உள்மனசு தன் வேலையை முடித்து அந்த யோசனையைத் தேடி நமது ஞாபகத்துக்குக் கொண்டுவந்தது என்று நாம் அறியக்கடவோம்.

மனம்.

அந்தரங்க மனம்.	பகிரங்கமனம்.
சொற்பனத்தில் வெளிப்படுவது,	விழிப்பு நிலையில் (சாக்கிரத்தில்) இருப்பது.
Reason	Reason
யூகித்து, விஷயங்களை நிதானித்து அறியும் சக்தி கிடையாது.	[யுக்தி புத்தி] இதற்கே யுண்டு.

ஞாபகசக்தி [Memory] இரண்டிற்கும் உண்டு. வெளி மனசின் ஞாபகசக்தி அற்பம்; உள் மனசின் ஞாபகசக்தி அபாரம். உள்மனசில் எல்லாம் பதிந்து கிடக்கின்றன. மனசை [வெளி மனசை]க் கொண்டு உள்மனசை யடக்கி யாளவேண்டும்.

மனசு.—மனதை மூன்று முகங்களுடைய பொருளென்றும், ஒன்று விழிப்புநிலையிலுள்ள முகமென்றும், ஒன்று ஸ்வப்பனாவஸ்தையிலுள்ள முகமென்றும், ஒன்று சமாதியிலும் சிற்சிலவேளை நிஷ்டையிலுமுள்ள முகமென்றும் கூறுவர். மேலோர் பூர்வஞானம் கீழ்முகத்திலிருந்து நடுமுகத்திற்கு வந

ஒருவர்மீது மேலுணர்ச்சி ஒன்று தோற்ற சின்னம் புலப்படாதபோது நம்பிக்கை வைக்கும்காலமும் போய்விடுகிறது.

கிறதென்றும், தீர்க்கதரிசனம மேல் முகத்திநின்றும் நடுமக த்திற்கு வருகிறதென்றும் சொல்வர்.

ஆருவது அறிவு.—மனிசனுக்கு ஐந்து அறிவல்லவோ இருக்கின்றன; ஆருவதாக இன்னொரு அறிவும் உண்டு. இதை மக்கள் யாது காரணத்தாலோ பல நாளாகக் கையாடா மல் விட்டுவிட்டார்கள் போலும்! கையாடாமல் விட்டுவிட்ட எந்த வித்தையும் சீக்கிரம் பட்டுப்போகுமல்லவா? அதுபோல இந்த ஆருவது அறிவு மக்களைவிட்டு ஒழிந்துவிட்டது. இதை த்தான் பூர்வம் நம் பெரியோர் ஞானதிருஷ்டி—அறிவாகிய கண்—மூன்ருவது கண் என்று சொன்னுர்களென்று நினைக் கிறோம். இது சிலவேளை சில சாமான்ய மனிதர்களுக்கும் கூடப் புண்ணிய வசத்தனுலோ எப்படியோ கிடைத்து விடுகி றது. இதைக்கொண்டு சிலர் உலகத்தில் யட்சணிபேசியும், குறி சொல்லியும், தெய்வமாடியும் பிழைத்து வருகின்றுர் கள். இப்படிப்பட்ட சாமான்ய ஜனங்கட்கு நடந்த விஷயங் களைச் சொல்லத் தெரியுமேயன்றி, இனிமேல் நடக்கப்போ கும் விஷயங்களைச் சொல்லமுடியாது. தீர்க்கதரிசன திரு ஷ்டி ஞானிகட்கு [அறிவாளிகளுக்கு] அன்றி மற்றையோரு க்குக் கிடைக்காது; [புருஷன்—பெண்சாதி] [காதலன் காதலி] [சோதரன்...சகோதரி] [தாய்—பெண்] [தந்தை— மகன்) [நண்பர்—சிநேககள்] [குரு—சிஷ்யன்] இப்படிப் பட்டவர்கட்குமட்டும் சாதாரணமாக இந்த ஆருறாம்அறிவாம் வித்தை பிரயோஜனப்படுமென்று சொல்லுகிறுர்கள். இத ற்கு ஒரு சிறு உதாரணம் கொடுப்போம்.

பிரிந்த காதலர்.—ஒரு பெண் இளமையில் ஒரு சிறு வன் பேரில் மோஹம் கொண்டாள் என்று வைத்துக்கொள் வோம்; அது அவளுக்கு மட்டுந்தான் தெரியும், அதைத் தமுக்கு போட்டுக்கொண்டா வருவாள்? அவனுக்கும் அவளி டம் காதல் உண்டானது. பாஸ்பரம் உயிருமுடலுமாக இந்தக் காதலனும் காதலியும் நேசித்துவருகிறுர்கள். இவர்கள் குடும் பங்களும் சிநேகத்தால் ஒன்றேடொன் சம்பந்த முடைய

தான் ஒரு நிர்மானத்தைச் செய்துவிட்டு பிறகு அதை மாற் ற மனமுறதி வேருக்கே உண்டு.

னவென்றுங் கொள்வோம், இந்தச் சின்னப்பெண்ணுக்கு ஒரு பேர் வைப்போமா? நல்லது, அப்படியே-புஷ்பம் என்று அழைப்போம். பையனை—சுந்தரம் என்று கூப்பிடுவோம். புஷ்பம் சுந்தரத்தை அத்தான் என்று அழைப்பாளாம். சுந்தரம் புஷ்பத்தை கண்ணே! என்று கூப்பிடுவானும். இப்படி இவர்கள் இருவரும் வளர்ந்துகொண்டு வருகிறார்கள்; யௌவனம் அடைந்தார்கள்! பெண்ணுக்குக் கல்யாணப் பேச்சு நடக்க ஆரம்பித்தது.

வைசியர்

முதலிமார்

தொண்டை மண்டலம்	சோழநாடு
கார்காத்தார்	கொண்டல் கட்டிகள்
முடிகொடுத்தார்	கொண்டை கட்டிகள்
சைவர்	வைணவர்
மாம்ச பக்ஷணிகள் அல்லாதவர்	ஆதியில் மாம்சம் தின்னாதவர்களாயிருந்து பின் தின்னக் கற்றுக்கொண்டவர்கள்.
சுந்தரம் வைசிய ஜாதியில் ஒரு கிளையாகிய வேளாள ஜாதியின் ஒரு கிளை நாங்கள் என்கிறார்கள் சுந்தரத்தின் மாதா பிதா.	புஷ்பம் சூத்ர ஜாதியில் ஒருகிளையாகிய வேளாள ஜாதியில் ஒரு கிளை நாங்கள் என்கிறார்கள் புஷ்பத்தின் மாதா பிதாக்கள்.
சிவமே தெய்வம்; விஷ்ணு நாற்றம் கூடவே கூடாது.	ஹரியே தெய்வம்; சிவன் சுடுகாட்டுத் தெய்வம்; பேயோட்டி; அவன் வாசனையே வேண்டாம்.

கறி தின்னமாட்டோம்; மீன் தின்னமாட்டோம். நண்டு நத்தை தின்னமாட்டோம், பையன்மட்டும் இரகசியமாய் முட்டையும் சூப்பும் சாப்பிட்டு வழக்கமாய் விடுகிறான்.

இந்தக் குடும்பத்தில் கறி தின்னாதவர்களும் உண்டு. ஆட்டுக் கறி மட்டும் தின்கிறவர்களுண்டு. முட்டை மட்டும் தின்கிறவருண்டு; மீன் மட்டும் தின்கிறவருண்டு; வெளிப்படையாய்த் தின்கிறவர்களுண்டு.

ஜாதி கெட்டுப்போகும், மதம் கெட்டுப்போகும், ஆசாரம் கெட்டுப்போகும், அநுஷ்டானம் பட்டுப்போகும் என்றும், பெண்ணைக் கொடுக்கிறதில்லை யென்றும் சொல்லிவிட்டார்கள். பாபம் சுந்தரம் கதி யென்ன? புஷ்பம் என்ன செய்வாள்? சுந்தரம் எந்நேரமும் புஷ்பத்தையே நினைத்துக் கொண்டிருக்கிறான். புஷ்பம் சர்வதா சுந்தரத்தையே தியானம் செய்துகொண்டிருக்கிறாள். 'இருவர் மனமும் ஒத்துப்போயின. அன்பாகிய சங்கிலியால் இருவரும் கட்டுப்பட்டார்கள். இப்படியிருக்கும்போது, எல்லாம் நிசப்தமான இரவு காலத்தில்... நித்திரையின்றிக் கிடக்கும் சுந்தரன் புஷபத்தின் உருவத்தை மனதில் தியானித்து, "கண்ணே என்செய்வேன், உயிர் துறப்பேன்" என்று எண்ணினான். உடனே அவ்விடத்தில் அவர்களிருவருக்கும் இருக்கிற மனப் பொருத்த மாட்சிமையால் அங்கே ஆறாவது அறிவு உதயமாய் விடுகின்றது. உடனே தூரத்திலிருக்கும் புஷ்பத்திற்கு மின்னல் வீசினதுபோல் இந்த ஆசை மொழிகள் செவிப்புலனாயின. "ஆ அத்தான் இன்று காலையில்தான் என்னை பொருவனுக்குக் கட்டிவிட்டார்கள்; ஆயினும் யான் செத்தாலும் என் அன்பு மாறாது; செத்த பிறகாவது உன்னை யடைவேன். திருவருட் செயலெதுவோ!" என்று அவனுருவைத் தியானித்து உறுதியாக மனதில் எண்ணினாள்; இவை யாவும் அந்த ஆறாவது அறிவின் மகிமையால் தந்திவந்த மாதிரியாக சுந்தரத்தின் அந்தரங்கத்துக்கு—அறிவுக்கு வெளியாயின. பிற்பட்டு இவர்கள் அடைந்தது சுகமோ துக்கமோ? படிப்பவர்களே அறியவேண்டும். மனம் ஒன்றுபட்டார் சிற்சில சமயம் மனசால் கூடப் பேசிக்

பெரிய நூலாசிரியர்கள் சேர்க்குமிடத்து, புதிய நூலாசிரியர்கள் உத்தரமாகத் தள்ளுவார்கள்.

கொள்ளக்கூடுமென்ப. [இதை யோசித்து மூடக் கல்யாணங் கள் செய்வதை நிறுத்திவிடவேண்டும். புத்தியோடு ஒன்றைச் செய்தால் கைம்பெண் வளர்த்த கழிசிறை என்ற சொற்சிறு டருக்கு அவகாசமில்லாமற் போய்விடுமெனக.]

யோகம்‘—யோகம் என்றால் சேர்க்கை, அதாவது கூடு தல். வியோகம் என்றால் தேகத்தைவிட்டு ஆன்மா நீங்கியதெ ன்று பொருள். யோகத்தில் கர்மயோகம், பக்தியோகம் இராஜ யோகம், ஞானயோகம் என நான்கு யோகங்கள் உண்டு.

கர்ம யோகம்.—தான் செய்யும் கர்மங்களில் பற்றில் லாமல் யாவற்றையும் பகவானுக்கு அர்ப்பணம் செய்து பலா பலனைக் கருதவே கருதாமல், செய்யவேண்டிய யாவற்றையும் தனது கடமையாக எண்ணி முடித்துச் சாந்தி பெறல்.

பக்தியோகம்.—அன்புருவான பகவானை அன்பாலடை ந்து அன்பாய் நிற்றல். பாரபட்சமின்றி எல்லோரையும்யாவற் றையும் பகவானாக அல்லது பகவானுடைய திருமேனியாகக் கருதி சுகம் பெறல்.

இராஜயோகம்:—இயமம், நியமம், பிராணாயாமம், பிரத்யா ஹாராதி வகைகளான தேக சுத்தம் [நாடி சுத்தம்] செய்து, பிராணனை யடக்கியாண்டு, மனசுக்குச் சாந்தமுண்டாக்கி மனசை வாகனமாக்கி அதன் மேலேறிக்கொண்டு, பிரபஞ்ச ச ஞ்சாரம்செய்து அதற்குப் பின் அறிவை யுள்ளபடியே அறி சித்து ஆதமலாபம பெறல்.

ஞானயோகம்:—அறிவாய் நின்ற கடவுளை [சுவாமியை] அறிவு மார்க்கத்தில் ஆராய்ந்து அடைந்து, அறிவாய் நின்று [போறிவில் ஒடுங்கி] அறிவாய் விடுதல் என்ப. இந்த நான்கு யோகங்களும் ஓர் ஊருக்குப் போகும் நான்கு சாலைகள் என்ப எந்த வழியாலும் கடவுள் வீட்டை நாம் அடையக் கூடும். இப்படி யடைந்த யாவர்க்குமே வெளி ஒரு அடையாளம் உண் டு. அவர்கள் பார்வை அற்புதமான அருட்பார்வையாகும்.

தான கண்டுக்க முடியாத அடையாளில் பார்த்தும் பாராதவன் போல் போகும்படி நேரிடுகிறது.

அருட்பார்வை:—அருட்பார்வை யுடையோரின் கண்கள் கருணை பொழியும். அவர்களைக் கண்டபோதே நமக்கு ஒருவிதமான சுகம் உண்டாகும்; நம்முடைய துக்கமொழியும்; அந்த பார்வையின் பெருமை என்னே என்னே! அதைத் தான் பெரியோர் குளிர்ந்த பார்வை என்றார்கள். அந்தப் பார்வை பட்டபோதே நம்முடைய மனசும் உடலும் உயிரும் குளிர்ந்து புளகாங்கிதமடையும். அப்படியா? மெய்தானா?—ஆ தடையென்ன: உண்மைதான். ஒரு விடநாயகன்—ஒரு விடநாயகியினுடைய குளிர்ந்த பார்வையால் என்னென்ன சுகங்கள் அடைகிறான். அவளே பிறிதொரு சமயம் கடுகடுத்த முகத்தோடு இவனைப் பார்த்தாளானால் என்ன நரகம் அனுபவிக்கிறான். அப்படியிருக்க—பெரியோர்களது ஆநந்த பார்வையின் பெருமைக்குத் தடையொன்றுண்டோ? எப்படி யொருவன் மின்னிலிடைக் கன்னல் மொழிப் பூங்கொம்பின் கடைக்கண் பார்வை பட்ட மாத்திரத்தில் அவட்கு அடிமையாய் விடுகிறானோ, அப்படியே மகான்களின் கடைக்கண் பார்வைபட்ட யாவன் தான் பாபவிமோசனமாகாமலிருப்பான்? செம்பும் பொன்னாய் விடும்; கன்மனம் கரையும்; உடலம் புளகாங்கிக்கும்; உயிரும் அற்புத சுகம்பெறும். மனமானது அறிவு வடிவம் பெறும். இந்தப் பெரியோரின் கடவுட் பார்வையைப் பற்றி எவ்வளவு எழுதினாலும் முடிவு காணமாட்டோம். இதன்றி, சாமான்யரும் அடையக்கூடிய வசிகரப் பார்வை யொன்றுண்டு. இந்தப் பார்வை மகான்கட்கும், சக்ரவர்த்திகட்கும், மகா சமர்த்தர்கட்கும், அதிகமாக இயற்கையிலுண்டென்ப.

சக்தியை யறிதல்:—எல்லா ஜனங்களுக்கும் சக்தி உண்டென்றாலும், உண்டென்றறிந்தவர்கட்கே அது பிரயோசனம் செய்யும். உதாரணமாக ஜலத்தில் நீந்தும் சக்தி எல்லோருக்குமே உண்டு. எல்லோரும் நீந்தத் தெரிந்து கொள்கின்றனரா? இல்லை. புதுமையாக நீந்திக் கற்றுக்கொள்ள வந்தவன் பிறரைக்கண்டு ஆச்சரியமடைந்து வாய் பிளந்து நிற்கின்றான்; பிறபட்டுத் தானும் நீந்தக் கற்றுக்கொண்டால் சந்தோஷப்படுகிறான். சிலர் ஆயுசு முழுமையும் நீந்தத் தெரிந்து கொள்ளாமலே காலத்தைக் கடத்தி விடுகின்றனர்; ஆயினும் அவர்கட்கு அந்த சக்தி யில்லாமற் போகவில்லை யல்லவா?

ஸமூகத்தின் பொறுப்பாளிகள்.—ஒரு சங்கத்தின்—ஒரு ஜாதியின்—ஒரு தேசத்தின்—அறிவு மழுங்காதிருக்கும்வரை அதற்கு நாசமேற்படாது. நமது தேசத்தில் முற்காலத்திலே நமது ஜாதியின் முழுமையின் அறிவுக்குப் பொறுப்பாளியாக 'பிராமணர்' என்னும் பெயருடைய ஒரு வகுப்பினர் இருந்ததாகப் பழைய நூல்களிலே காணப்படுகிறது. அந்தப் பிராமணர் தமது கடமைகளைத் தவறாது நடத்தியிருப்பாரானால் மற்றக் குலத்தவரெவரும் நெறிதவறியிருக்கமாட்டார்கள். மஹா பாரதப்போர் நடந்திராது. பாரத தேசத்தில் பெரியதோர் க்ஷத்திரிய நாசமும் கலியும் வந்திருக்க மாட்டா.

சகுனி சொல்லுகிறான்:—"நமக்கு ஏற்கனவே அளவிறந்த செல்வமிருக்கும்போது இன்னும் அதிக செல்வத்தை ஏன் விரும்பவேண்டும்? இருப்பதை வைத்துப் பாதுகாத்தால் போதாதா" என்று ஒருவேளை நீ நினைக்கிறாய் போலும், ஆனால் இவ்வித நினைப்பு நின்போன்ற ஆரியமன்னர்களுக்குத் தகாது. ஏனென்றால், நித்தம் ஏராளமான செல்வத்தைத் தானம் முதலியவற்றால் ஒரு பக்கத்திலே செலவிட்டு, மற்றொரு பக்கத்திலே போர் முதலியவற்றால் மிக்க பொருள் சேகரித்துக் கொண்டிருப்பதாகிய இரட்டைத் தொழில் ஆரிய மன்னர்களால் அநுஸரிக்கப்படுவது. இருப்பதை மூடிவைக்க விரும்புவோன் அரசனல்லன்; கிழச்செட்டி எதுபோலெனில் கங்கைநதி நாள்தோறும் அளவில்லாத ஜலத்தைக் கடலிலே கொண்டு கொட்டுகிறது. என்ன வீண் செலவு! இந்த "வீண் செலவு" செய்யாவிட்டால் ஜீவனின்றி அழுகிப் போய்விடும். மலைமீதிருந்து அதற்கு ஓயாத ஊற்றுவாயிருக்கின்றது. அதனை உலகிற்கெல்லாம வழங்குவதுமின்றி கடலிலும் கொண்டு பொழிகிறது. ஆம் "மேலே" செல்வரிடமுள்ள பொருளைக் கவர்ந்து, "கீழே" ஸாமான்ய ஜனங்களுக்குப் பலவகைகளிலே பயன்படுத்த வேண்டும். அப்போதுதான் ராஜா கங்கை நதியைப்போல் "ஜீவநதி"யாக இருக்கலாம். கங்கைநதியைப்போலவே ஆரியர்களும.

அந்த ஆசார மடி வேஷ்டி என்பர்கள் ஆபத்துக்கும் நோய்களுக்கும் உதவாமல் அப்போதும் தமது ஆசார மௌடீகம் காண்பித்தவராயிருப்பர். ஆசாரம் பெரிதா? ஆபத்சகாயம் பெரிதா

ஸந்தர்ப்பத்துகேற்ற சந்தம்:—கம்பரிடத்தில் பல விசேடம் உண்டு; அவர் நடையானது ஸந்தர்ப்பத்திற்கேற்றவாறு கம்பீரமும் இன்னோசையும் மிடுக்கும் தளர்ச்சியும் உடையதாயிருப்பது. ஸந்தோஷ செய்தி உரைக்குமிடத்தில் சந்தத்திற்கேற்பக் கூத்தாடவுங்கூடும். வியஸனமான செய்தி உரைக்குமிடத்தில்படிக்கின்றவன் பாட்டைப் பரபரப்பாகப் படிக்கப் புகுந்தாலும், அந்தப் பாடல்கள் பரபரப்பாக நாவிலே உழல்வதில்லை. கதாநாயகன் அழுகின்ற இடத்தில் கதையைப் படிக்கின்றவனும் அழுவான்; அவன் களிக்கின்ற இடத்தில் இவனும் களிப்பெய்துவான். இது கவிவல்லோருக்கு மாத்திரமே கைவந்த மர்மம்; எல்லார்க்கும் இது செய்ய இயலாது.

கம்பரும் வான்மீகியும்.—இங்ஙனமாகக் கம்ப ராமாயணத்தின் அழகுகளையும் நயங்களையும் எடுத்துக் காட்டுவது எப்படிப்பட்டவர்களுக்கும் இலகுவான காரியம் அல்ல. அழகு நிறைந்திருக்கின்ற இடத்திலே தனித்தனியான கூறுகளின் அழகை எடுத்துக்காட்ட இயலுமோ? ஆனாலும், கம்ப ராமாயணம் வால்மீகி ராமாயணத்தின் ஆதாரம் வைத்துக்கொண்டு பாடினதுதானே. இதற்கென்ன ஏற்றமுண்டு எனச் சிலர் கூறுவர். இரண்டையும் படித்துப் பார்த்தவர்களே இதற்கு ஸமாதானம் கூறத்தகுந்தவர்கள். கால்ட்வெல் என்பவர் "ஹோமருடைய இலியட்டுக்கும், போப்பினுடைய இலியட்டுக்கும் என்னபேதமோ, அதே பேதம் வால்மீகி ராமாயணத்துக்கும் கம்ப ராமாயணத்துக்கும் உண்டு" எனச் செப்பியிருக்கிறார், பௌவர் என்பவர் "நாம் வால்மீகி ராமாயணத்தையும் படித்திருக்கிறோம்; கம்ப ராமாயணத்தையும் படித்திருக்கிறோம். வால்மீகி முனிவர், விரிவாய்க் கூறுகின்றவராயினும் விளக்கக் கூறுகின்றவர்; கம்பர், சில இடங்களில் சுருக்கக் கூறுகின்றவராயினும் சில இடங்களில் விஸ்தாரமாய்க் கூறுகின்றவர். இன்பந் தருவனவான சொற்போக்குகளும் அலங்காரமான கற்பனைகளும் அவர்க்கு விசேஷமாயிருக்கின்றன. ஆயினும், வால்மீகியை வியந்து கூறுவதோ, கம்பரையே உவந்து கூறுவதோ எனத் துணிதல் கூடாமல் இடர்ப்பட்டோம்" என்றெழுதியிருக்கிறார்.

பிரபஞ்ச விலாஸம்

1. பிறரிடம் தந்த புஸ்தகங்களில் திரும்பி வராதது பழைய கிடைக்காத புஸ்தகங்களாகவே இருக்கும்.

2. வெளியூர் ஸஞ்சாரம் செய்யாதவர்க்கு அனுபவம் குறைவாகவே இருக்கும், உலகின் செய்திகளை அவர்கள் உணரார்.

3 பத்திராசிரியர் சம்பளம் பெறுவோராயிருந்தால் அவரை அல்பகுமஸ்தாக்களும் அதிகாரம் செய்கின்றனர்.

4. மிக்க புண்பட்டுத்தமிற இடத்தில், தூரப் பிரிந்து போயிருந்தவது மனம் ஆறலாமென்று தோன்றுகிறது.

5. ஒருவனுக்கு ஒரு கடிதம் எழுதி இதில் அவன் ஏமாறுவானென்று நினைக்கிறார்கள். ஆனால் அவனே அக்கடிதத்தைப் பார்த்தவுடன் விழித்தெழுகிறான்.

6 கிடைக்கும் பணம் செலவுக்குப் போதாமற் போவது மூல் நட

லையின்மட்டுமே, அதைத்தடவையில் அதுவே போதுமானதாகும்படி பழ கிச் சொல்ல முடியும்.

7. அடிக்கடி க்ஷவரம் செய்து கொள்வதில் பல பிரயோஜனங்கள் உள்ளன.

8 தேகத்திற்கு ஜாதிபேதமன்றி மனதிற்கு ஜாதிபேதமில்லை. தேகத் தோடு செய்யும் பூஜைக்கே புஷ்பங் கள் தேவை; மானஸ பூஜைக்கு செடி களிலிருந்து புஷ்பங்கள் கொய்ய வே ண்டியதில்லை.

9, சொல்லிப் பார்க்கலாம், பல முறை கெஞ்சலாம் பிறகுங்கூட அல க்ஷியம் செய்வோரை உதறிவிடு.

10 ஒரு பானைசோறு தின்பவன் என்று மற்றவனைப்பற்றி உன்னிடம் பழிப்போன் பிறகு உன்னைக் குறித் தும் வேறிடத்தில் இகழக்கூடும்

11 தனக்கென்று ஒரு அவசர காரியம் ஏற்படுமபோது அது அதிக தூரமான இடமென்று தோன்றாது.

12 அவனை சுலபத்திலேமாற்றி விடலாமென்று நினைக்கிறான். ஆனா ல் ஏமாற்ற முயலுகையில்தான் அவ ன் பெரிய விழிப்பாளியென்று தெரி கிறது.

13 தவறுதலும், தீர்க்கதரிசனக் குறைவினாலும் செய்யப்படும் காரிய ங்களனைத்தும், தெரிந்து செய்யப்படும் குற்றங்களுக்குள்ள விதத்திலும் குறை ந்ததல்லவில்லை.

14 நத்தைச்சூரிச் செடியின் விதைகளை உலரவைத்து வெய்யில் வறுத்து இடித்து வஸ்திரகாயம் செ ய்து பால் சக்கரை சேர்த்து காபி போல் தினம் அருந்தினால் அநேக ரோகங்கள் தீரும். மிக்க ருசி. ஆனால் உண்மை நத்தைச்சூரியை அறிந்த வர் வெகுசிலரே

15 பக்தி என்று கூறி எத்தனை யோ பாபகரமான காரியங்களும், தேசம் என்று கூறி எவ்வளவோ துரோகச் செயல்களும் செய்யப் படுகின்றன

16 கஷ்டத்தை எதிர் கொண்டு ஏற்றிட நினைப்போருக்கு அக்கஷ் டம் ஒரு துன்பமாகப் படுவதில்லை

17 கடவுளை மறந்துவிடுவோர்— அவரை நினைத்து அழும்படியான சோதனைக் காலத்திலும் பிறகு வருவார். செய்த அக்கிரமத்தை அனுபவிக்காமல் தீராது.

18 நீ தூரத்திலிருக்கும் போது உன்னை நினைக்காத நண்பர்கள் நீ ஊர் வந்து சேர்ந்த பின் உன்னிடம் குலாவுவது பாசாங்கே.

19 எவனை பணிந்து அதிக வே லை செய்கிறானோ அவன் தலையிலே யே கனத்த மூட்டைகளை ஏற்றுவர். ஏமாற்றுவர், இழிவு படுத்துவர்.

20 தங்கட்குப் பதில் கடிதம் எழுதாத நண்பர்களை வெகு பேர் நினைக்காமலே மறந்தும் போகிறார் கள். பிறகு சந்திப்பதுமில்லை.

21 சக்தி யிருக்கிறது, அரைக்கப் பழம் கிடைக்கவில்லை, பழம் இருக் கிறது, அரைக்க உண்மைச் சக்தி கிடைக்கவில்லை. இரண்டும் இருக்கும் போது பசியில்லை. பசியிருந்து சாப் பிட்டாலோ வயிற்றுவலி. என் செய் வது? ஒன்றிருந்தால் மற்றொன்றில் லை, இதுவே உலக நிலை.

23 வயோதிகனுடைய கஷ்டங் களும் அசக்திகளும் வாலிபனுக்குத் தெரியாது.

24 எவர்கள் உதவமாட்டார்க ளென்று நினைக்கிறோமோ அவர்களே சில சமயங்களில் நல்ல துணையாகின் றார்கள்.

25 அதிமோக உலகத்தைப் பற்றி பறிகொண்டவன் பிறரு டையகுற்றங்களை ஓயாமல் மன்னித் துக் கொண்டே இருக்கா விட்டால் இவ்வுலகில் அவனுக்கு எந்த உறவு நட்புமில்லை. எல்லோரையுமே வெறு த்து ஏகாந்தியாக வாழும்படிவரும்.

Printed at the "Raju Press" Jagannatha Baugh Saidapet, Madras, and Published by S. C. Ramanujulu Naidu, 617 Mela Adayavalanjan St. Srirangam, Trichy. 31-1-32